27 MAY 1964

தமிழ் வாழ்க.

துணர் ௪௰. மலர் ௧.

# தமிழ்ப் பொழில்

குரோதி - சித்திரை

1964

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

தொண்டு தமிழ் முன்னேற்றம்

## கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர் :

ச. சுயம்பிரகாசம், B. A., B. L.,

# தமிழ்ப் பொழில்.


**பதிப்பாசிரியர் குழு.**

1. **திரு. ச. சுயம்பிரகாசம். B. A., B. L.,** தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம், பொழிற்றொண்டர்.

2. **திரு. நீ. கந்தசாமி பிள்ளை,** பள்ளியகரம், தஞ்சாவூர்.

3. **சித்தாந்த கலாநிதி ஔவை சு. துரைசாமி பிள்ளை,**
பேராசிரியர், தியாகராயர் கல்லூரி, மதுரை.

4. **திரு. வித்துவான் க. வெள்ளைவாரணனர்,**
ஆராய்ச்சித்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

5. **திரு. வித்துவான் ச. பாலசுந்தரம்,**
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.


## உள்ளுறை.

துணர் சம. மலர் க.


| | பக்கம் |
|---|---|
| 1. மரபின் மலர்ச்சி<br>புலவர், திரு நா. அறிவுஒளி | 1 |
| 2. "மியா" ஒரு அசைச்சொல்லா? அன்று? <br>வித்துவான், திரு. மோ. இசரயேல், எம். ஏ. | 4 |
| 3. பண்டைத் தமிழரின் வானநூல் அறிவு<br>தி. வேங்கடராமன், பி. ஏ., பி. டி. | 9 |
| 4 களவியல் உரைநலம் (இரண்டாம் நூற்பா உரை)<br>திருவாட்டி, மேனகை அம்மையார் | 13 |
| 5. பாவைப் பாடல்கள்<br>நக்கீரன் வழியடிமை,<br>வித்துவான், பி. மா. சோமசுந்தரனர் | 19 |
| 6. பாட்டும் பயனும்<br>வித்துவான் திரு. சொ. சிங்காரவேலன், எம். ஏ. | 26 |
| 7. அழுகைச் சுவை<br>வித்துவான் திரு. ந. செகதீசன் | 31 |


## அறிவிப்பு

தமிழகப் புலவர் குழுவின் 15-ஆவது கூட்டம் 1964 மே 23, 24 சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்களிலும் நிகழும் என்று அதன் அமைப்பாளர் முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதமவர்கள் அறிவிக்கின்றார்கள்.

# தமிழ்ப் பொழில்

துணர் ௪௰

குரோதி

1964 - 65

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர் :

ச. சுயம்பிரகாசம், B. A., B. L.,

# உள்ளுறை.

குரோதி 1964-65. | துணர் சம | மலர் க. கஉ.

பக்கம்


1. மரபின் மலர்ச்சி
புல்வர், தி. நா. அறிவுஒளி — 1

2. மியா' ஒரு அசைச் சொல்லா? அன்று?
வித்துவான், திரு. மோ. இசரயேல் எம். ஏ., — 4

3. பண்டைத் தமிழரின் வானநூலறிவு
திரு. தி. வேங்கடராமன் பி. ஏ., பி. டி., — 9

4. களவியல் உரைநலம் (நூற்பா-2)
திருவாட்டி, மௌகை அம்மையார் — 13, 86, 126, 185, 204

5. பாவைப் பாடல்கள்
வித்துவான், பி. மா. சோமசுந்தரனுர் — 19

6. பாட்டும் பயனும்
வித்துவான், சொ. சிங்காரவேலன். எம். ஏ. — 26

7. அழுகைச் சுவை
வித்துவான், ந. செகதீசன் — 31, 54, 92

8. பாவேந்தர் பாரதிதாசன்
வித்துவான், ச. பாலசுந்தரம் — 33

9. உணர்வு மலர்ச்சி
புலவர், தி. நா. அறிவுஒளி — 35

10. இலக்கணமும் மரபும்
திரு. ச. செந்தில்நாதன் — 38

11. செயப்பாட்டு வினைச்சொல்
வித்துவான், ஞானசம்பந்தம் — 41, 47

12. செற்ருன்—செத்தான்
'அன்னை' — 49

13. கம்பனும் கூனியும்
புலவர், மு. சுந்தரேசன் — 59

14. நெஞ்சில் ஒளிரும் நேரு
வித்துவான், ச. பாலசுந்தரம் — 65

15. உலகமே என்நாடு
புலவர், தி. நா. அறிவுஒளி — 66

16. நன்றே செய்க
ஆசிரியர், கோ. கோவிந்தசாமி — 68

17. திருவடிசூடிய பெருந்தகை
திரு. ந. இராமதாத பிள்ளை பி. ஏ., — 72

பக்கம்


18. தமிழும் ஆய்வும்
வித்துவான் பி. மா. சோமசுந்தரனார் 97

19. எழுத்துலக முரண்பாடு
புலவர், தி. நா. அறிவுஒளி 106

20. உயிர்வளச் சிலம்பு
இர. குழந்தைவேலு எம். ஏ. 110

21. கலங்கரை வெற்றிச்சின்னம்
புலவர், சி. கோவிந்தராசனார் 115

22. காலத்தை வென்றவர்
திரு. ஏ. கே. பெருமாள் எம். ஏ. 120

23. அன்பு மடல்கள்
வெண்பாவூர், பொ. திருஞானம் 122

24. புரட்சிப்பேரொளி பூங்குன்றன்
புலவர், தி. நா. அறிவுஒளி 161

25. மனையறத்தில் கண்ணகி
புலவர், ந. செகதீசன் (தமிழன்பன்) 165, 200, 249

26. சீதை (த. இராமநாத பிள்ளை பி. ஏ.,) 169

27. பாத்திரப் படைப்பு (திரு. ஏ. செந்தில்நாதன்) 180

28. விழாக்கள் (பொழிற்றொண்டர்) 183

29. வெள்ளித் திருமுற்றம்
வித்துவான், சி. கோவிந்தராசனார் 184

30. பொன்விழா மலர் பற்றிய வேண்டுகோள் (க. த. ச.) 190

31. கலைமகள் விழா (பொழிற்றொண்டர்) 193

32. பாராட்டியல் வாழ்த்துரைகள் 198

33. வானநூற் கலைஞர்
திரு. தி. வேங்கடராமன் பி. ஏ., பி. டி., 214

34. கல்வியமைப்பு (திரு. மா. இரத்தினம்) 218, 241

35. ஞாலப்பற்று (புலவர், தி. நா. அறிவுஒளி) 225

36. கானற்பாணியும், கனகவிசயரும்
திரு. K. S. மகாதேவன் எம். ஏ., பி. எஸ்ஸி., 228

37 வற்றுச்சாரியை
வித்துவான். திரு. மோ. இசரயேல் எம். ஏ., 234

38. வாழ்க்கைத் துணை
அ. த. ப. திருஞானசம்பந்தன் 245

39 மயக்கம் (பண்டித. சித. நாராயணசாமி 251, 296)

பக்கம்

40 புகார்முதல் வஞ்சிவரை
வித்துவான், சி. கோவிந்தராசனுர் 259, 337, 363

41. நான்கும் இரண்டும்
திரு. கோ. கோவிந்தசாமி 265

42. இளங்கோவின் புரட்சி
புலவர், வி. சச்சிதானந்தம் 269

43. இலக்கியத்தில் திங்கள்
திரு. தி. வேங்கடராமன் பி. ஏ., பி 276

44. வீர மைந்தன்
வித்துவான், ஐ. நாராயணன் 284

45. ஏர்க்களமும் போர்க்களமும்
தமிழவேள் 287

46. அலைகடலே!
வித்துவான், ச பாலசுந்தரம் 289

47. மங்கலதேவிக் கோட்டம்
வித்துவான், சி. கோவிந்தராசனுர் 291

48. பரிபாடலின் இலக்கியச் சுவை
புலவர், தி. நா. அறிவுஒளி 303

49. ஏவல்வினையில் வினைவின் ஆற்றல்
வித்துவான், மோ. இசரயேல் எம். ஏ. 313

50. இந்தி—தமிழ்—தமிழ்நாடு
திரு. ச. சுயம்பிரகாசம் பி. ஏ., பி. எல் 321

51. வள்ளுவ அரசியலின் அடிப்படைக் கோட்பாடுகள்
சாலை. இளந்திரையன் எம். ஏ. 325

52. தன்னலத் தாண்டவம்
புலவர், தி. நா அறிவுஒளி 329

53. வாய்மை (திரு. கோ. கோவிந்தசாமி) 335

54. வேள் எவ்வி (இலக்கிய நாடகம்)
வித்துவான், ச. பாலசுந்தரம் 345, 377

55. வள்ளுவச் சொல்லாட்சி
சாலை. இளந்திரையன் 353

56. கையறவு (Dr சு. நடேசன் இலங்கை) 359

57. ஜெ. எம். நல்லசாமி பிள்ளை நூற்றாண்டு நிறைவு 361

58. பாட்டுச் சொல்லாட்சி
புலவர், தி. நா. அறிவுஒளி 369

# தமிழ்ப் பொழில்

## தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| | | |
|---|---|---|
| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௧௯௯௫ | மலர் |
| | குரோதி, சித்திரை. | |
| ௪௰ | 1964 ஏப்ரல், மே. | ௧. |


# மரபின் மலர்ச்சி

புலவர். திரு. நா. அறிவுஒளி.

போரில் தீர்க்கப்படும் பூசல்கள்—சிக்கல்கள்—உண்மையில் தீர்ந்துபோவதில்லை. அவை மீண்டும் கிளைத்தெழுந்து பெரும் பூசல்களையே—போராட்டங்களையே—உண்டாக்குகின்றன. அமைதியைக் குலைப்பதே போரின் தொழில். அமைதியைப் போர் உருவாக்குவது என்பது அழகான தவறு!

அரசியலின் காரணமாக விலையற்ற உயிர்களைக் கொல்லும் கொலைத் தொழில்தான் மிகப் பெரிய அறியாமை. அடித்தும் கொன்றும் தான் சிக்கலுக்குத் தீர்வு காண வேண்டுமா? அந்த நிலையிலேயே உலகம் வளராமல் இருப்பது அறிவு வளத்தைச் சுட்ட வில்லையே! உலகில் பலர் கொடுமைகள் தான் வெற்றிக்குத் தலை சிறந்த வழி என நம்புகின்றனர். படித்தவர்கள் எனக் கூறிக் கொள்பவர்களிலும் பலர் இவ்வழியையே மதிப்பதும் நம்பிப் போற்றுவதும் பெரிதும் நாணற் குரியதாக வுள்ளது.

வாழ்க்கைச் சிக்கல்களை (வீட்டுக்காயினும் நாட்டுக்காயினும்) அமைதிவழியில் தீர்த்துக் கொள்ளாமற் போனால், பண்பாடு—நாகரிகம்—அறம் என்பவற்றை யெல்லாம் உலகம் இன்னும் உணரவில்லை யென்றே பொருள்படும். விலங்கு நிலையைத் தமக்குரிய பாடமாக மக்கள் கொள்வது இத் துறையில் வேண்டாததே.

வடலூர் இராமலிங்க அடிகள் காட்டிய 'அருள்நெறி' யின் அருமை பெருமையை இன்னும் உலகு தெளியவில்லையே! வைய முதல்வர் வள்ளுவ நல்லோர் வகுத்துணர்த்திய வாலிய தூநெறியை நானிலம் நனிபோற்றி ஒழுக வில்லையே! ஞாலப்

புலவர் பூங்குன்றச் சான்றோர் புகன்ற புதுமொழிப் பொருளை இவ்வுலகு புரிந்து கொள்ளவில்லையே !

வாழ்வின் நெறி 'அமைதியும் அழகும்' கனிந்து பொலிந்தமைய வேண்டும். இந்நெறி சிதையாமல் வளர்வதே வாழ்வின் முன்னேற்றம் இது சிதைந்தால் பின்னேற்றமே.

உள்ளத்தைக் கோயிலாக்கி உண்மை ஒளியைக் குடியேற்றி விட்டால் கள்ளம் ஓடிவிடும்; கனிவருள் நிறைந்து விடும். ஆனால் இந்நிலையை அடையப் பெருமுயற்சி செய்ய வேண்டும். ஒழுக்கத்தை உயிராகக் கொண்ட உயரிய முயற்சியே வேண்டற்பாலதாம்.

தனிக்குடும்ப அமைப்பில் எழும் சிக்கலுக்கு உணர்ச்சிக் குறைவு காரணமாம். பொது வாழ்வமைப்பில் நேரும் சிக்கலுக்கு அறிவின்மை அடிப்படையாம். தனிவாழ்வில் உணர்வு வளமும். பொது வாழ்வில் அறிவு வளமும் அமைந்தால் பல வகைப் போராட்டங்களை, இடுக்கண்களை வெல்ல முடியும்.— இந்நுண்மையைத் தெளிந்த கல்விமுறை, கல்விக் கூடங்களில் அமைந்தால் சிறப்பாக நாடு வளமுறும். இத்தகு நன்னோக்கத்தை அடிப்படையாக வைத்துச் செயல்படும் குழுவும், மாந்தரும் மிக வேண்டும்.

அரசியல் சார்பாக எழுகின்ற உணர்ச்சிகள் மிகவும் ஆற்றலுள்ளவை போல முதலில் காட்சிதரும்; பின் மங்கிக் கொண்டே போய்விடும். இலக்கிய உணர்ச்சியால் எழும் எழுச்சி, மிக அமைதியாகவே உள்ளங்களை ஈர்த்துக் கவரும், அது வளர்ந்து வளர்ந்து கொழுமை ஏயய்தி நிறையுணர்ச்சியாகும். அத்துடனமையாது, நிலையாக அவ்வுணர்ச்சி சீரிய நிலைபெற்று ஒழுகலாற்றில் வாழவும் வகை யாகும்.

இந்த உண்மை தெளிந்தால் வாழ்க்கையின் அடிப்படைகளை உண்மையாக உருவாக்க வேண்டிய இடம் மக்கள் உள்ளமே என்பதையும், அவ்வரும்பனியைச் சீருற ஆக்குந் திறம் கலை—இலக்கியங்களிடமே அமைந்துள்ளன யென்பதையும் நனி தெளியலாம். ஒருநாட்டின் விழுமிய பண்பாட்டைக் காப்பதில் அரசியலைவிடச், கலை இலக்கியங்களே மிகப் பெரும் பங்கும் தொண்டும் பெற்றிருக்கும் உண்மையை வரலாறு கற்றோர் நன்கறிவர்.

செயற்கு அரியவை தம்மையே மக்களைச் செய்தொழுகி வாழுமாறு வற்புறுத்துகிறார் வள்ளுவர். செயலில் கடைப்பிடித்தொழுகுவதற்கு மிகமிகக் கடுமையான அறமுறைகளாக இருப்பினும், மக்கள் உள்ளத்தில் மட்டும் அவ்வற உணர்சி

களும் அறப்பண்புகளும் மிக அழுத்தமாகப் பதிந்திருக்குமாறு திருக்குறளும், தமிழறமும் கவர்ச்சி செய்து தம் ஆற்றலைப் பதித்திருக்கும் புதுமை வியத்தற்குரியது. இந்த வியத்தகு நிலை எவ்வாறு அமைந்தது? அதுவே மொழிப் பயனுன கலை—இலக்கியங்களின் பேராற்றல் பருப்பொருட்டாகத் தோன்ருமல் நுண் வினையாகச் செயற்படும் வியப்பார் வினையின் விளைவு இதுவே. இந்தப் பேராற்றல் கலை—இலக்கியத் துறையில் மேன்மேலும் சொழித்தோங்கி வளருமாறு செய்தலே புலமை சிறந்தோரின் சீரிய தொண்டாக அமைய வேண்டும்.

அரசியல் அச்சுறுத்தியே தம்கொள்கைகளைத் திணிக்கிறது. அச்சுறுத்தியே அறிவுரைகளைப் புகட்ட வேண்டிய நிலை இருக்கிறதென்ருல், மக்களின் உள்ளநிலையில் அவ்வளவு ஆழமாக அடிமைப் பான்மையும், மடமை நம்பிக்கையும் வேர் வீழ்த்துப் பரந்திருக்கிறதென்றே பொருளாம். ஆனல் அச்சுறுத்தித் திணிக்கப்பட்ட சட்டதிட்டங்கள் எதுவும் காலத்தை வென்று நிலைபெற வில்லை என்பதை வரலாற்றறிவு மெய்யாகக் காட்டுகிறது.

கௌடில்யரின் கோட்பாடுகள் செயலற்ற நிலையை நாமறிவோம். அன்று ஆட்சியாளரின் தலைகள் வணக்கத்தோடு ஏற்று, வாள்முனையிலே செயலாக்கப்பட்ட சட்டதிட்டங்கள் எல்லாம் இன்று எங்கே ?

தமிழரசுகள் சட்டதிட்டங்களை ஓரளவு ஏற்றுச் செயல் பட்டிருந்தாலும், அவற்றைவிட அறத்தின் ஊழை மிகவும் ஆற்றல் வாய்ந்ததெனை மதித்தனர். அரசர்கள் கோவில்களுக்குச் செய்த அறக் கொடைகளைக் கல் வெட்டில் பொறித்து வைத்து, அவ்வறமுறையைப் பின் வரும் மரபினர் விடாது கடைபிடிக்க வேண்டுமெனை வேண்டிக் கொண்டு, பின்னர் அவ்வாறு கடைப்பிடித் தொழுகாதவர், "கங்கை கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்திலே போகக் கடவர்..." என்றும், அவ்வறத்தைப் போற்றிக் காப்பவரின்" அடிகள் என் முடிமேலன என்றும் கூறிவரும் பகுதிகளினின்றும் சட்டங்களால் செயல்படுத்தும் மரபைவிட, நம்பிக்கையை அவர்கள் நன்கறிந்திருந்தமை தெளிவாகும்.

இத்தகைய மரபொழுக்கத்தின் வளர்ச்சியால் தான் பண்பும், அறமும் நீடூழிவாழ்ந்து வளர்ந்து வருகின்றன. நல்லவைகளை மரபாகவும், மன்பதைக் கட்டுப்பாடாகவும் ஆக்கிவைத்தனர் முன்னோர்.

ஊரின் பொதுநடை முறைகளில் தனிமாந்தன் விரும்பினாலும், விரும்பா விட்டாலும் பங்கெடுத்துக் கொள்ள

# "மியா" ஒரு அசைச்சொல்லா? அன்று?

வித்துவான் மோ. இசரயேல், எம். ஏ.
தமிழ் ஆய்வுத் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

தமிழ் இலக்கண நூலார் "மியா" என்பது முன்னிலை அசைச்சொல் (தொல். சொ. 247, நன். 63, 440) எனக் குறிப்பிட்டுள்ளனர். எனவே, அது முன்னிலையின்கண் மட்டும் வழங்கும் என்பது தெளிவு. தொல்காப்பியனார் இதனை 'உரையசை' (எழு 34) எனவும் 'ஏவல் குறித்த உரையசை மியா' (எழு. 224) எனவும் குறிப்பிடுவதினின்று இது ஏவல் வினைகளில் உரையசையாக அமையும் எனக் கருதப் படுகின்றது.

மியா என்பது ஒரு அசைச்சொல்லானால் அது ஏவலை எங்ஙனம் குறிக்கும்? அசைச்சொல் பொருளற்றது என்றே உரையாசிரியர்கள் விளக்கம் தருகின்றனர். அங்ஙனம் இருக்க, தொல்காப்பியனாரே அதனை உரையசை (அசைச்சொல்) எனவும், ஏவல் குறித்தது எனவும் குறிப்பிடுவது எவ்வாறு பொருந்தும்? இவண், சங்க காலத்தில் ஏவலாக வழங்கிய பிற சில சொற்களோடு இதனை ஒப்பிட்டு நோக்குதல் சிறப்புடைத்து.

1. உண்ம் (புறம். 203)
2. நின்மே (நற். 300)
3. செய்ம்மே (புறம். 46)
4. உரைமோ (அகம். 66)

---

வேண்டியவனாகிறான். இதுதான் கட்டுப்பாட்டின் கொள்கை, இது உள்ளத்தளவில் அமைந்த பொறுப்பான தளையாகும். தனிவிருப்பம், பொதுச் செயலை ஒன்றும் செய்ய முடியாது போனாலும் போகும். ஆனால், பொதுச்செயல், தனிவிருப்பத்தை எவவகையிலேனும் தாக்கியே விடுகிறது.

இப்பொது உணர்வை அறிஞர்கள் உணர்ந்தே வழக்குக்கும் மரபுக்கும் தனிச்சிறப்பை—மதிப்பை—அமைத்தனர். அந்த நல்ல நோக்கத்தைத் தெளிந்து, அத்தகு சீரார் மரபை வளர்க்க இளந்தலை முறைத்தமிழரும் முன்வர வேண்டும். பண்டைத் தமிழறங்களைத்—தமிழ் மரபுகளைத்—தமிழொழுக்கங்களைத்—தமிழ்பண்புகளை மரபு வழிபட்ட வாழ்வொழுக்கமாக ஆக்கத் தமிழ்க் குழவிகட்குப் பயிற்ற வேண்டும். இது காலத்தால் செயத்தக்க அருந்தொண்டு மட்டுமல்ல; இன்றைய உலகுக்கு நனி இன்றியமையாத தொண்டு.

இவை எல்லாவற்றிலும் அடிச்சொல்லை (stem) அடுத்து மகரம் வந்து உள்ளது கவனித்தற்குரியது. தொல்காப்பியனார் "செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கு மெய்யொடுங் கெடுமே ஈற்றுமிசை யுகரம்" (சொல் 238) என்று கூறுவதினின்று, சேனாவரையர் "செய்யும் என்னும் முற்றுச் சொற்கும் ஈற்று மிசையுகரம் மெய்யொடும், மெய்யொழித்தும் கெடும்" என விளக்கம் தருகிறார். எனவே இம்மகரம் உம்மின் உகரம் கெட்ட வடிவேயாகும் என்பது தெளிவு. மேற்கொடுக்கப் பட்ட முதன் மூன்று எடுத்துக் காட்டுகளில் மெய்யொழித்தும், இறுதி எடுத்துக் காட்டில் மெய்யொடும் உகரம் கெட்டுள்ளது. எனவே செய்யும் என்னும் வாய் பாட்டுச்சொல் இவற்றில் அடங்கி உள்ளது எனக்கொள்ள இட முண்டு. அவ்வனம் கொள்ளின், அவற்றை

உண் + உம் > உண்ம்
நில் + உம் + ஏ > நின்ம் + ஏ > நின்மே
செய் + உம் + ஏ > செய்ம் + ஏ > செய்ம்மே
உரை + உம் + ஓ > உரைம் + ஓ > உரைமோ.

எனப் பிரித்துக் காணல் இயலும்.

இவண் சில வினாக்கள் எழுதல் கூடும். செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று முன்னிலைக்கண் வராதே! (சொல். 227) அது நிகழ்காலம் காட்டுமே! (சொல். 227) தற்காலப் பேச்சு வழக்கை நோக்குங்கால் "செய்யும்" என்னும் வாய் பாட்டு வினைமுற்றிற்கும் முன்னிலை ஏவலுக்கும்சில வகையில் முரண்பாடு (contrast) உள்ளதே!

| (எ—டு) | செய்யும் வாய்ப்பாட்டு வினைமுற்று | முன்னிலை ஏவல் |
|---|---|---|
| 1. | தரும் | தாரும் |
| 2. | கேட்கும் | கேளும் |
| 3. | பார்க்கும் | பாரும் |

இங்ஙனம் சில வடிவங்கள் வேறுபடினும், பல ஒரே தன்மை யாகவே உள்ளன. எடுத்துக்காட்டாக,

| | |
|---|---|
| பாடும் | பாடும் |
| உறங்கும் | உறங்கும் |
| ஓடும் | ஓடும் |

தொல்காப்பியனார் சங்க இலக்கியத்தில் காணலாகும் உண்ம் (புறம். 203) போன்று 'செய்யும்" என்னும் வாய்ப்பாட்டு ஏவல் வடிவங்களைப் (forms) பற்றி ஒன்றும் குறிப்பிட்

டிலர். இவை பெரும்பாலும் உயர்திணைக்கண் ஏவலாக வழங்கின "செய்யும்" என்னும் ஒரே வடிவில் அமைந்த வினைச்சொற்களே தொல்காப்பியனார் காலத்தில் இறப்பு ஒழிந்த ஏனைய காலங்களில் (non-past) வழங்கியிருத்தல் கூடும் எனத் தெரிகின்றது. நன்னூலர் "செய்யும் நிகழ்பெதிர்வும்" (நன். 145) என்று குறிப்பிடுகின்றமையால் பிற்காலத்தில் அது எதிர்காலத்தையும் குறித்தது என்பது தெளிவாக்கப் பட்டுள்ளது. இச்சொற்களில் அமைந்துள்ள 'உம்' எதிர் காலங்காட்டுகிறது இயற்கை (நன். 145) வினைமுற்றும் ஏவலும் முரண்பாடுடையவையாயினும் அவை ஒரே வாய்ப்பாட்டின ஆதலின், ஏவல், வினைமுற்றிற்குக் கூறிய மாற்றங்களை ஏற்கும் என்பது தவறில்லை

எனவே மகரம் எதிர்காலங் காட்டுகிறது எனலாம். மகரம் எதிர்காலங் காட்டுதல் பிற இடங்களிலும் காணலாகும்.

கொண்மார் = கொள் + ம் + ஆர்
என்மர் = என் + ம் + அர்
செய்ம்மன = செய் + ம் + அன் + அ
என்மனர் = என் + ம் + அன் + ஆர்

இவற்றில் வந்துள்ள மகரம் 'உம்'மின் திரிபேயாகும் இவற்றை யொட்டி, "மியா"வின் வழக்கைத் தெளிபடுத்த உரையாசிரி யர்கள் கொடுக்கும் சொற்களையும் பிரித்தல் இயலும்

கேண்மியா = கேண்ம் + யா = கேள் + உம் + யா
சென்மியா = சென்ம் + யா = செல் + உம் + யா
சொன்மியா = சொன்ம் + யா = சொல் + உம் + யா

[உம் = ம் எதிர்காலம் காட்டுகிறது என்பது தெளிவாக்கப் பட்டுள்ளது.]

ஈற்றின் கண் உள்ள 'யா' என்பது யாது? இதே போன்று நின்மே, உரைமோ என்பனவற்றில் உள்ள ஏ, ஓ என்பன எதைக்குறிக்கின்றன? டாக்டர் வரதராசனார் இவற்றை வினாவாக அல்லது பொருள் உணர்த்தாத அசை இடைச் சொல்லாகக் கருதலாம் எனக்குறிப்பிடுகின்றார்.[1]. யா, ஏ, ஓ என்பன வினாவாக வழங்கினும் (தொல்—எழு. 32; சொல் 167,256,257) இவ்விடங்களில் வினாப்பொருளைத் தருதலின்மையின் இவற்றை வினாவாகக் கொள்ளல் இயலாது

---

1. டாக்டர், மு. வரதராசனார் — மொழியியற் கட்டுரைகள் பக், 249,252

பொருள் உணர்த்தாத அசைச் சொல் (expletive particle) எனவே கொள்ளுதல் தரும் தொல்காப்பியனார் யா (சொல் 279), ஏ (சொல்.272), ஓ (சொல்.261) ஆகியவை அசை நிலை யாக வழங்குதலையும் தம் நூலின்கண் விளக்கி இருத்தல் கண்டு மகிழ்தற்குரித்து. எனவே, அவற்றை மேற்கண்ட சொற்களில் அசைச் சொல்லாகக் கொள்ளுதலே மிகப் பொருத்தம் உடையதாகும்.

மேலே "மியா" என்பது உம்/ம் + யா என விளக்கப் பட்டது. இடைப்பட்ட இகரம் எவ்வாறு தோன்றுகின்றது?

| | | | | |
|---|---|---|---|---|
| எ—டு | கேள் | + உம் | + | யா |
| | கேளும் | + | + | யா |
| | கேண்ம் (இ) | + | + | யா |
| | கேண்மியா. | | | |

நன்னூலார் "தன்மொழி மெய்ம்மின் யவ்வரின் இகரம் துன்னு மென்று துணிநரும் உளரே" (நன்.206) கூறுகின்றமையால் கேண்ம் + யா > கேண்மியா என்றாகின்றது. இதனை மொழியியலார் இடையுயிர் தோன்றல் (epenthesis) என்பர்

"மியா" என்பது பிறழ்பிரிப்பினால் (metanalysis) தோன்றிய வடிவேயாம். தொல்காப்பியனார் வினையடிச் சொல்லின் இறுதியை யா, ஓ போன்ற அசைச் சொல்லோடு இணைத்து மியா, மோ (சொல்.274) என்னும் வடிவங்களைத் தவறாகக் கொண்டு விட்டனர் போலும். அவரைப் பின்பற்றி நன்னூலாரும் அதே வடிவங்களை அசைநிலைகளாக (நன்.440) அமைத்து விட்டனர்.

மேற்காட்டப்பட்ட வடிவங்களில் ஏவலை உணர்த்துவது யாது? டாக்டர் வரதராசனார் உம் ஏவல் விகுதி எனவும் மகரம் அதினின்று அமைந்தது எனவும் குறிப்பிடுகின்றார்.[2] டாக்டர் கால்டுவெல் "தமிழ்ப் பேச்சு வழக்கில் இடம் பெறும் முன்னிலைப் பன்மை ஏவல், வடிவாலும் பிறப்பாலும் "உம்" மீறு கொண்டுவரும் எதிர்கால முற்றை (aoristic future) ஒத்திருக்கும்.........செந்தமிழ் நடையில் முன்னிலை ஏவலாக வரும் வினை, தொடக்கத்தில் எதிர்கால வினையாகவே வழங் கிற்று என்பதில் எனக்குச் சிறிதும் ஐயம் இல்லை.........அவ் விடங்களில் வரும் 'உம்' ஒன்றே என்றாலும், ஏவல் குறித்து வரும் இடங்களில் 'உம்' பன்மை எண் குறிக்கிறது; எதிர்கால

2. டாக்டர் மு. வரதராசனார் — மொழியியற் கட்டுரைகள் பக். 200

வினைமுற்றில் 'உம்' எதிர்காலம் குறிக்கிறது.........……இவ்வொப்பீட்டினின்று ஏவற்பன்மை வடிவம்; எதிர் கால வடிவின் மீது கட்டப்பட்டுள்ளது'' என்று குறிப்பிடு கின்றார்.[3]. கால்டுவெல் உம் எதிர்காலம், பன்மை, ஏவல் என்பனவற்றையெல்லாம் உணர்த்தும் பகமையது எனக் கருதினார். அவர் கொண்டிருக்கும் ''ஏவற் பன்மை எதிர்கால வடிவின் மீது கட்டப்பட்டுள்ளது'' என்னும் முடிவு மிகவும் பாராட்டற்குறியது.

கேள், செல், சொல் என்னும் வேர்ச் சொற்கள் (roots) மட்டுமே நின்று (சொல்.450) ஒலியழுத்தத்தால் ஏவலை உணர்த்தவும் முடியும். ஆகவே மேற்கொடுக்கப்பட் கேண் மியா போன்ற சொற்களில் அமையும் ஒலியழுத்தம் (stress) ஏவலைக் குறிக்கின்றதா எனவும் ஆராய்தற்குரித்து அங்ஙன மாயின், உம்/ம் எதிர்காலம் உணர்த்துவதேயாகும். எனினும் பன்மையைக் குறிக்கும் உறுப்பு (element) பிறிதொன்று இல் லாமையின் அதுவே ஒரே சமயத்தில் பன்மையையும் குறித்து நிற்கிறது எனக்கருதவும் இடம் உண்டு.

எனவே, மியா ஒரு அசைச்சொல் அன்று என்பதும், அதில் உள்ள அசைச்சொல் 'யா' வே யாகும் (சொல்.279) என்பதும், மகரம் உம்மின் வேற்றுருபேயாகும் (allomorph) என்பதும், அது பொதுவாக எதிர்காலம் காட்டினும் ஏவற் பன்மையில் பன்மையையும் குறித்து நிற்கலாம் என்பதும் மியா என்னும் வடிவம் தவறான பிரிப்பினால் (wrong segmentation) தோன்றியது என்பதும் இக்கட்டுரையின் கண் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

---

3. Dr. கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் பக். 532-33

---

உரிமைக்கென்றே உழைப்பாய்—நண்பா
உரையும் பொருளும்ஈந்து உயிரைக்கேட் டாலுந்தந்து (உரிமை)

அருமைத் தமிழகத்தின் பெருமை நினைந்துமொழி
ஆக்கஞ்சிதைப் பவரின் போக்கை எதிர்த்துதமிழ் (உரிமை)

வருந்தி உழைத்துமுன்னோர் சுரந்த வளஞ்செழித்து
வாழ் வினுக்குதவாமல் பாழ்படுமுன் விளித்து (உரிமை)

கரந்த உளத்தொடுநம் சிறந்தபண் பாடழித்துக்
கயமை புரியுமயற் கொடுமை தனையழித்து (உரிமை)

# பண்டைத் தமிழரின் வானநூல் அறிவு

## தி. வேங்கடராமன், பி.ஏ., பி.டி.

அண்டத்தை வென்று அளந்துவிடும் 'இராக்கட்டு' கொண்டு, பல கோள்களுக்கும் சென்று சேரும் ஆற்றலும்—விண்டுரைக்க, அறிய அரியதாய் விரிந்த வானவெளியில் இயங்கும் அண்ட கோடிகள் இயக்கங்களைக் காணும் ஆற்றலும்—அறிந்துள்ளது இந்த இருபதாம் நூற்றாண்டு.

எல்லையற்ற முடிவில்லாத விண்ணில் இயங்கும் கோள்களும், மீன்களும் ஆய்வதற்குக் கோடிக்கணக்கில் பொருள் செலவிட்டு அமைத்த ஆய்வுக் கூடங்கள்பல. அண்டங்களின் ஆழங்கான இயலா உண்மைகளை அம்பலம் ஏற்றும் விஞ்ஞானப் பெருங்கருவிகள்பல. எண்ணற்ற கோள்களின் நிலைகளையும், காலத்தின் அமைப்பினையும் அறிந்துகூறும் வானநூல் கலைஞர்கள்பலர். வானக்கலை மிகப் பெருகி வளர்ந்துள்ள இன்றைய நிலை இது.

ஆய்வுக் கூடங்கள், ஆய்வுக் கருவிகள், வானக் கலைஞர்கள் இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் இற்றை நாளில் உள்ளது போன்று இல்லை. எனினும் அன்றையநிலையில் வானிலை, கோணிலை ஆயதுறைகளில் பண்டைத்தமிழர் நம்மனோர் போன்றே திறமும், தெளிவும், ஆற்றலும் படைத்திருந்தனர்.

இன்றைய வானியல் வளர்ச்சியை நோக்குமிடத்து பண்டையோர் அறிவியல்நிலை சிறந்தது என்று கூறமுடியாதெனினும் வானநூல் துறையில் புலமை பெற்றிருந்தனர் எனக் கூறலாம்.

விஞ்ஞானக் கலைகளுள் மிகப் பழமையான வான சாத்திரத்தில் பண்டைத் தமிழ்மக்கள் வரலாற்றுநூல் எழுதத் தொடங்கிய காலத்திற்கு முன்னரே பெரும் அறிவு பெற்று விளங்கினர் என்பதற்குச் சான்றாக அமைவன பண்டைத் தமிழரின் வானநூல் அறிவினையும், ஆய்வினையும் மேனாட்டறிஞர்கள் நடுநிலை வழுவாது ஆராய்ந்து அறிந்து வெளியிட்டக் கருத்துக்களும், சங்க இலக்கியங்களுமே ஆகும்.

முதற்கண் மேனாட்டறிஞர்கள் ஆய்ந்து கூறியவற்றைக் காண்போம்.

"கோள்கள், விண்மீன்களின் ஓட்டத்தை நுணுகி ஆராயும்முறை நம்நாட்டில் சரித்திர காலத்திற்கும் முந்திய

தாகும். தமிழரின் கணிதமுறையே வழக்கிலுள்ள எல்லாக் கணக்கு முறைகளிலும் நிதானமானது'' என்று டாக்டர் சிலேட்டர் (Dr! Slater) கூறுகின்றார்.

''பண்டைக் காலத்திலேயே தமிழர்கள் தமது நாள் வாழ்க்கைக்கு வேண்டிய அளவு வானூற் பயிற்சியை மிகவும் சிறந்ததாகச் சீர்படுத்தி வைத்திருந்தனர். அவர்களது முறை பலவாற்றானும் இன்னும் நிலைபேறுற்று நிலவுகின்றது. தென்னாட்டின்கண் உள்ள பரதவர் தமது தொழிலின் பொருட்டு வளர்பிறை, தேய்பிறை இயக்கங்களைத் தெரிய வேண்டியமையின் பண்டை நாளிலேயே காலத்தை 'மதிவழி யளக்கும்' கணக்கை உண்டாக்கினர். உழவர்களோ பருவ காலங்களையும், பக்லவனியக்கங்களையும் உற்றுநோக்கி அறிந்திருந்தனர்.

தமிழரது காலக்கணக்கை ஒழுங்குறுத்துவதாகிய வியாழ மண்டலச் சுழற்சி ஐந்து கொண்ட அறுபதாண்டு வட்டம் தமிழர்க்கு மட்டுமே உரித்தாவது. தமிழரின் மனைவாழ்க்கை நிகழ்ச்சிகளின் பொருட்டு வழங்கும் பன்னிரண்டாட்டைக் காலஅளவும் அங்ஙனமே தமிழர்க்கு மட்டும் உரித்தாவது.' என மேனாட்டறிஞர் மக்லின் கூறியுள்ளார்.

''தமிழ் நாட்டில் வழங்கும் அறுபது ஆண்டுகட்குத் தமிழ் மக்கள் வடமொழிப் பெயர்களைப் புனைந்திருப்பினும், வியாழ மண்டிலச் சுழற்சியை ஆராய்ந்து கண்டு அவ்வாற்றால் அவ்வறுபது ஆண்டுகளை வகுத்தமுறை தமிழ் மக்கட்கே உரியது' எனச்சிலேட்டர் என்ற அறிஞர் கூறுகின்றார்.

''சிந்துவெளி மக்கள் இராசி மண்டலத்தை நன்கு அறிந்தவர்கள். அவர்கள் காலத்தில் எட்டு இராசிகளே இருந்தன. சிந்து மக்களின் இராசிமண்டலக் குறிப்பைக் கவனித்துப் பார்க்கையில் அக்காலம் ஏறக்குறைய கி.மு. 1610 எனக் கூறலாம். சிந்துவெளிமக்கள் வீடு கட்டியுள்ள முறையி லிருந்து இவர்கள் இராசிக்கணங்களின் இயக்கங்களைக் கவனித்து வந்தனர் என்பது தெளிவாகிறது. முத்திரைகளில் குறிப்பிட்ட சில குறியீடுகள் இராசிகளைத்தாம் குறிக்கின்றன'' எனச்சிந்துவெளியினை ஆராய்ந்த அறிஞர் பெருமகன் ஹூராஸ் பாதிரியார் கூறும் கூற்று தமிழரின் வானநூல் அறிவினை விளக்கும் பேரொளியாய் அமைந்துள்ளது. சிந்துவெளிமக்கள் தமிழினமக்கள் சிந்துவெளி நாகரிகம் திராவிடர் நாகரிகம் என்பது அறிஞர் பெருமக்கள் கருத்து எனவே தமிழின நாகரிகத்தின் பாரிய சீரிய முகப்புக் கோபுரமாக நமக்குக் காட்சியளிக்கும் சிந்துவெளி ஆய்வு

தமிழர் வானநூல் அறிவினை விளக்கும் பேரொளியாய் அமைந்துள்ளது.

மேனாட்டறிஞர்கள் ஆய்ந்துகூறிய இக்கூற்றுக்களை உற்று நோக்குவார்க்குப் பண்டைத்தமிழர் பெற்றிருந்த வானநூல் அறிவு எத்தகையது என்பது நன்கு விளங்கும். இனி இலக்கியங்களில் பண்டைத்தமிழரின் வான நூல் அறிவு பற்றிக் காணும் குறிப்புகளைக் காண்போம்.

பகலும் இரவும் இடைவிடாமல் வானத்தைப் பார்த்து ஆண்டு நிகழும் வில்லும், பின்னும், ஊர்க்கோளும் தூமமும், மின்வீழ்வும், கோணிலையும் கண்டு எடுத்துக்கூறும் காலக் கணிதர்— சூரியன் முதலியவற்றை நேரே சென்று கண்டு வந்தாற்போலே உண்மையை எடுத்துக்கூறி விளக்கும் ஆராய்ச்சியாளர் பண்டு தமிழகத்தில் இருந்தனர். அவரை.

ஆறிரு மதியினும் காருக வடிப் பயின்று
ஐந்து கேள்வியுற அமைந்தோன்''

என்று இளங்கோவடிகள் பாடுகின்றார்.

நாள்மீன்களையும், தாரகைகளையுமுடைய சுடர்ச்சக்கரத்தைப் பொருந்திய ஆதித்தன் முதலாகவரும் கோள்களது நிலைமையை நன்கு அறிந்தவர் நம்தமிழர் 'நெருப்பெனச் சிவந்த உருப்பவிர் மண்டிலம்,' என விளங்கும் ஞாயிற்றினையும், மாக விசும்பில் விளங்கும் வெண்டிங்களினையும், 'முந்நீர் நாப்பண் திமிற்சுடர் போல விளங்கும் செவ்வாயினையும், மீன் அரசு வெள்ளியினையும் மற்றுமுள்ள கோள்களையும் நன்கு ஆய்ந்து பல அரியகருத்துக்களை வெளியிட்டவர் தமிழர்.

என்றூ ழுறவரு மிருசுடர் நேமி
யொன்றிய சுடர்நிலை யுள்படுவோர்'

என்ற பரிபாடலடிகள் இதற்குச் சான்றாக அமையும்.

செஞ்ஞாயிற்றின் செலவும், அஞ்ஞாயிற்றின் இயக்கமும், இயக்கத்தால் சூழப்படும் மண்டிலமும், காற்றுச் செல்லும் திசையும், ஆதாரமின்றி நிற்கும் வானமும் என்றிவற்றைத் தாமே அவ்வவ்விடஞ் சென்று அளந்தறிந்தவர்போல இஃதிஃது இப்படிப்பட்டது என உரைக்கும் வானக் கலைஞர்கள் பண்டைத் தமிழகத்து இருந்தனர் எனப் புறப்பாடலால் அறியலாம்.

வான்மீன்களைப் பன்னிரண்டு வீடுகளாகப் பகுத்து அவற்றின் ஊடே செல்லும் பகலவன் இயக்கத்தினைக் கொண்டு 360 நாட்கள் அடங்கிய ஆண்டினைப் பன்னிரண்டு திங்களாக வகுக்கும் பகல்வழி யளவினையும், வான்மீன் நிலைகளை உணர்ந்து அவற்றின் ஊடே செல்லும் மதியின்

இயக்கத்தினைக் கண்டறிந்த நாள்களும், கோள்களும் வகுக்கும் மதியளவினையும் நன்கறிந்தவர் தமிழர்.

விண்ணில் மதிசெல்லும் வழியாகிய வட்டத்தினை 27 பிரிவுகளாகப் பிரித்து, அப்பிரிவுகளை அறிந்து கொள்ளும் அடையாளமாகப், புரவி, அடுப்பு, ஆரல் முதலிய நாள்கோள் இருபத்தேழு கொண்டு திங்களை வகுத்தனர்.

காலத்தைக் காட்டும் இயற்கைப் பெருங்கருவிகளான, கதிரவன், மதியம் விண்மீன்கள் இவைகளை நோக்கிக் காலக் கணக்கைக் கணித்தனர்.

திருமணம், உலகவறுமை, மழை பொய்த்தல் முதலிய இயற்கை நிகழ்ச்சிகள் கோள்களின் இயக்கத்தால் நடை பெறுகின்றன. என்று நம்பினர் பண்டைத்தமிழர்.

> 'அழல் சென்ற மருங்கின் வெள்ளியோடாது
> மழைவேண்டு புலத்து மாரிநிற்ப'

என்று வெள்ளி சென்ற இடத்துச் செவ்வாயும், செவ்வாய் சென்ற இடத்து வெள்ளியும் செல்லின் மழை பெய்யாது என்று இலக்கியம் கூறுவதால் பண்டைத்தமிழர் இயற்கை நிகழச்சிகள். கோள்கள் மீன்கள் இயக்கத்தால் நடைபெறு கின்றன என்று நம்பினர் எனஅறியலாம், இதுபோன்றபல சான்றுகள் இலக்கியங்களில் காணக்கிடக்கின்றன.

வானசாத்திர மட்டுமின்றி, வானசாத்திரத்துடன் தொடர்புடைய சோதிடக்கலையும் பண்டுதொட்டு வளர்க்கப் பட்டது. அந்நாளில் அரசரோடு அரசவையில் பன்னிரண்டு இராசிகளும் கோள்கள் நிற்கும் நிலையையும், திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் எண்ணும் ஐந்துவகையையும் அறிந்த சோதிடக்கலைஞரும் இருந்தனர் என்று சங்க இலக்கி யங்கள் கூறும். அவர்களைப் பெருங்கணி, மௌத்திகன் எனவும் கூறுவர் இளங்கோவடிகள் இச்சோதிடக் கலைஞரைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

பழங்காலத் தமிழகத்தில் தமிழர் கடலோடிகளாய் இருந்தனர். கடல் கடந்து விளைபொருள்களையும், செய் பொருள்களையும், மரக்கலமேற்றி பிறநாடுகட்குக் கொண்டு சென்று வெளிப்படுத்தும் கடலோடிகள் கடல்கடப்பதற்கு வானநூல் அறிந்தனர்.

வானக்கலையிலும், கணிதத்திலும் தலைசிறந்து பண்டை மக்கள் விளங்கினார்கள் என்பதற்கு நமது பஞ்சாங்கமே நல்ல சான்றாக அமையும். அதுகொண்டு அவர்களின் கணிதத் திறனையும், அறிவின் ஆழத்தினையும் அறியலாம்.

*சென்ற இதழ் தொடர்ச்சி :*

# களவியல் உரைநலம்

## (இரண்டாம் நூற்பா உரை)

(திருவாட்டி மேனகை அம்மையார், இராணிப்பேட்டை)

"முடியவே. தமியராய் புணர்ந்தார் என்பதனோடு மாறு கொள்ளும் எனின் மாறு கொள்ளாது. என்னை? அவள் ஆயங்களும் பொழிலிடம் புகுதலும் விளையாட்டு விருப்பினாற் பிரியும். என்னை பிரியுமாறு எனின், ஒருவரின் ஒருவர் முன்னர்த் தழை விழைதக்கன தொடுத்தும் என்றும், கண்ணி தண்ணறு!நாற்றத் தன செய்தும் என்றும், போதுமேதக்கன கொய்தும் என்றும் மயிலொடு மாறுடுதும் என்றும் குயிலொடுமாறு கூவுதும் என்றும் அருவியாடி யஞ்சுனை குடைதும் என்றும், வாச மலர்க்கொடியின் ஊசலாடுதும் என்றும் பரந்து அப்பாலுள்ளார் இப்பாலுள்ளாள் கொல்லோ என்றும் இப்பாலுள்ளார் அப்பாலுள்ளாள் கொல்லோ என்றும் இவ் வகை நினைத்துப் பிரிப என்பது.

"இவ்வகை அவளைத் தமியளாய்ப் பிரிபவோ எனின், எட்டியுஞ் சுட்டியுங் காட்டப்படுங் குலத்தினல்லளாகலானும், பான்மை யவ்வகைத்தாகலானும் பிறவாறு நினையார் பிரிப என்பது. ஆயின் இவ்வகைப்பட்ட ஆயத்திடைமேனாள் பிரிந்து பயின்றறியாதாள் தமியளாய் நிற்குமோ எனின் நிற்கும். தான் பயின்ற இடம் தன் ஆயத்தினோடு ஒக்குமாகலான் என்பது.

"யாங்ஙனம் நிற்குமோ எனின், சந்தனமும். சண்பகமும், தேமாவும், தீம்பலவும், ஆசினியும், அசோகும், கோங்கும், வேங்கையும், குரவமும் விரிந்து நாகமும் திலகமும் நறவும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலோடு மணங் கமழ்ந்து, பாதிரியும் பரவைஞாழலும் பைங்கொன்றையும் பிணியவிழ்ந்து, பொரிப் புன்கும் புன்னாகமும் முருக்கொடு முகை சிறந்து, வண்டறைந்து, தேனார்ந்து, வரிக்குயில்கள் இசைபாட, தண்தென்றல் இடைவிராய்த் தனியவரை முனிவு செய்யும் பொழிலது நடுவண், ஓர் மாணிக்கச் செய்குன்றின் மேல், விசும்புதுடைத்துப் பசும்பொன்பூத்து, வண்டுதுவைப் பத்தண்தேன் துளிப்பதோர் வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள். கண்டு, பெரியதோர் காதல்களிகூர்ந்து, தன் செம்மலர்ச் சீறடிமேற்சிலம்புகிடந்து புடைப்ப, அம்மலர் அணிக்கொம்பர் நடைகற்பதென நடந்துசென்று நறைவிரி வேங்கை நாண்மலர் கொய்தாள். கொய்தவிடத்து, மரகத மணிவிளிம்படுத்த மாணிக்கச்சுனை மருங்கினதோர் மரக

வல்லி மண்டபத்துப்போது வேய்ந்தபூநாறு கொழுநிழற்கீழ்க் கடிக்குருக்கத்திக் கொடிபிடித்துத் தகடுபடு பசும்பொற் சிகரங்களின் முகடுதொடுத்துவந்து இழிதரும் அருவி பொன் கொழித்து, மணிவரன்றி, மாணிக்கத்தொடு வயிரம்உந்தி, அணுகிவரருவி யாடகப் பாறைமேல் அதிர்குரல் முரசின்கண் ணிரட்ட, வண்டுந்தேனும் யாழ்முரல, வரிக்குயில்கள் இசை பாடத் தண்தாது தவிசுபடப் போர்த்ததோர் பளிக்குப்பாறை மணித்தலத்துமிசை, நீல ஆவட்டம் விரித்தாற் போலத்தன் கோலக்கலாவம் கொளவிரித்து மூளையிள ஞாயிற்றினிள வெயில் எறிப்பஓர் இளமயிலாடுவது நோக்கி நின்றாள்.

''அப்பால் தலைமகனும் பற்பல்நூறுயிரவர் கூர்வேலிளை ய்ரொடு குளிர்மாமலைச்சாரல் வேட்டம்போய் விளையாடு கின்றான், ஆண்டெழுந்ததோர் கடுமான் பின்னோடிக் காவலிளையரைக் கையகன்று, நெடுமான் தேரோடு பாகனை நிலவுமணற் கான்யாற்று நிற்கப் பணித்துத், தொடுகழலடி யதிரச்சுருளிருங்குஞ்சி பொன்ஞாணிற் பிணித்துக். கடிகமழ் நறுங்கண்ணி மேற்கொண்டுவண்டு மணனயர, அஞ்சாந்தின் நறுநாற்றம் அகன்பொழிலிடைப் பரந்துநாற, அடுசிலையொடு கணையேந்தி, வடிவு கொண்டகாமன் போலச்சென்று அவள் நின்ற இரும்பொழில்புகும். அஃது யாங்ஙனமோஎனின், வடகடலிட்ட ஒரு நுகத்தொருதளை தென்கடலிட்ட ஒரு கழி சென்று கோத்தாற்போலவும், வெங்கதிர்க்கனலியும தண கதிர்மதியமும் தம்கதி வழுவித் தலைப்பெய்தாற் போலவும் தலைப்பெய்து ஒருவர் ஒருவரைக்காண்டல் நிமித்தமாகத் தமியர் ஆவர்.''

எனஅழகுற விரித்தலை எண்ணுந்தோறும் சிந்தையில் இன்ப முதம் ஊறும். இவ்வுரையி னெறியில் ஈடுபட்ட சொக்கப்ப நாவலர் தம்முடைய தஞ்சைவாணன் கோவை யுரையில் இப்பகுதி முழுவதையுமே எடுத்தாண்டுள்ளார்.

இவர் தலைவியின் நடையழகு நவிலுதலைக் காணுங்கால். ('அம்மலரணிக்கொம்பர் நடைகற்பதென'') திருத்தக்க தேவர் இயற்றிய சீவகசிந்தாமணியில், சுரமஞ்சரியா ரிலம் பக்கத்தில் வரும்

''சீறடிய திண்கிணிசி லம்பொடுசி லம்ப
வேறுபடு மேகலைகள் மெல்லெணமி ழற்ற
சேறுபடு கோதைமிசை வண்டுஇசை பாட
நாறுமலர்க் கொம்புநடை கற்பதென வந்தாள்''

என்ற பாடல் நினைவுறுகின்றது.

''வடகடலிட்ட ஒருநுகத் தொருதுளை தென்கடலிட்ட ஒருகழி சென்று கோத்தாற்போலவும்'' என்ற உவமை நயம்

உணர்ந்து இன்புறற்பாலது. தொழுதகை தலைமேலேறத் துளும்புகண்ணீருள்மூழ்கி அழுதழுது அரனுர் செய்ய அடி மலர்க்கடிமை பூண்ட ஆன்றோராய வாதவூரடிகளார்,

"வளைபயில் கீழ்கடல் நின்றிட மேல்கடல் வானுகத்தின்
துளைவழி நேர்கழி கோத்தெனத் தில்லைத்தொல் லோன்கயிலைக்
கிளைவயி னீக்கியிக் கெண்டையங் கண்ணியைக் கொண்டுதந்த
விளைவையல் லால்விய வேனயவேன் தெய்வ மிக்கனவே"

எனத்திருக்கோவையாரில் திருவாய் மலர்ந்தருளிய திருப் பாடலினின்றும் இவ்வுவமை பெறப்பட்டதென அறிக.

## ௬ தலைமகன் தலைமகள் குணநலன்

தமியராதல் என்றற்குத் தம்உணர்வின ரல்லராத லென்றுரைகண்டார் அதனை விளக்குவான் புக்குத் தலைமகற்கு அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி என நான்கும் குணமெனவும், தலைமகட்கு நாண், மடம், அச்சம், பயிர்ப்பு என நான்கும் குணமெனவும் விதந்து, இந்நான்கு குணங்களும் தலைமகற்கும் தலைமகட்கும் புனல் ஓடும்வழிப்புல் சாய்ந்தாறபோல வேட்கை யான் மீதூரப்பட்டுச்சாய்ந்து கிடக்கும் என்றார். "எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள்" காண்பதே அறிவு எனவும்' காப்பன காத்துக் கடிவனகடிந்து ஒழுகும்சிலமே நிறை எனவும், ஒருபொருளை ஆராய்ந்து உணர்தலே ஓர்ப்பு எனவும் கொண்ட பொருள் மறவாமையே கடைப்பிடி எனவும் பெண்டிர்க்கு இயல்பாயே அமைந்து கிடக்கும் பண்பே நாண் எனவும் கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமையே மடம் எனவும் பெண்மையின் தான் காணப்படாததோர் பொருள் கண்டவிடத்து அஞ்சுவதே அச்சம் எனவும் தான் பயிலாத பொருட்கண் அருவருத்து நிற்கும் நிலைமையே பயிர்ப்பு எனவும் அக்குணங்களை விரித்துக் கூறினர்.

வேட்கையான் மீதூரப்பட்டுப் புனல் ஓடுவழிப்புல் சாய்ந்தாற்போலச் சாய்ந்து கிடப்பதென்றார் அவ்வேட்கை யினை விளக்கப் புகுந்து

"வேட்கை என்பது என்னே எனின் ஒருவரை ஒருவர் இன்றியமையாமை, அவ்வின்றியமையாவது நின்ற வேட்கை எல்லா உணர்வினையும் மீக்கித்தானேயாய், நாண்வழிக்காசு போலவும் நீர்வழி மிதவைபோலவும் பான்மை வழியோடி இருவரையும் புணர்ப்பிக்கும் என்பது. ஆகலான் தமியராய்ப் புணர்வது தலைமையொடு மாறுகொள்ளாது என்பது. இது காமப் புணர்ச்சி என்பது" என்றார்.

ஆயினும், "பெருமையும் உரனும் ஆடூஉ மேன" எனவும், அச்சமும் நாணும் மடனுமுந்துறுத்த, நிச்சமும் பெண்பாற்

குரியஎன்ப" எனவும் தோலாப் பெருமைத் தொல்காப்பியனுர் விளந்தவரையறை ஈண்டுஒப்பு நோக்கற்பாலது. செயற்கரிய செய்யும் பெருமையும் கூற்றுடன்று மேல்வரினும் கூடியெதிர் நிற்கும் ஆற்றலும் ஆடவர்மேற்றென்ருர். அச்சமும் நாணும் மடனும் என்றஅளவையே பெண்மக்கட்குரித்தாம் குணங்க ளாகக் கொண்டார். "முந்துறுத்த" என்றதனுல் பயிர்ப்பு முதலிய குணநலன்களையும் கூறினராயிற்றென நச்சினர்க் கினியர் உரைத்தாராவோவெனின் அஃது பெண்கட்குளவாகப் பிற்றைநாளாசிரியன்மார் பகர்ந்தபண்புகள் நான்கென்பதனை உளங்கொண்டுதாமே வலிந்துகண்ட பொருளாம். அஃதே தொல்காப்பியனுர்க்கும் கருத்தாயின் அதனைக்கிளந்தோதிச் செல்லாதிரார். ஆகலின் அவ்வுரை ஏற்றுக் கொள்ளற் பாலதன்று. அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி ஆயநான்கும் மாந்தரனைவர்க்கும் உரிய சிறப்பியல்புகள், எனவே அவை தம்மை ஒரு பாலார்க்கே உரித்தாக்கும் உரை ஒவ்வாத உரை யேயாம்

## எ. உள்ளப்புணர்ச்சி மெய்யுறுபுணர்ச்சி

மெய்யுறுபுணர்ச்சி பொருவிறந்தார் என்பதனேடு மாறு கொள்ளு மாகலின் உள்ளப் புணர்ச்சிவேண்டுவர் ஒருசார் ஆசிரியன்மார். தமர்கொடுப்ப அடுப்பத் தலைமகளை எய்தற் பாலான் ஏகதேசத்து எதிர்ப்பட்டுச் சென்று முயங்கினு னுயிற்று. பிறர்க்குரிய பொருள்எளிதாகச் செய்யப்படாமை யானன்றே அவன் இதுகாறும் பெரியனுய்ச் சென்றது. ஆயின் உலகத்துப் பன்மக்கள் எல்லாம் பெரியவர் சீர்த்தபொழுது வெளவுதலும் சீராதபொழுது வெளவாமையும் செய்தலான் தலைமகளும் அன்னளே, என்னை? குரவர் பணியின்றியே உள்ளம் ஓடினவழிஓடி ஒருவனை வழிபட்டு முயங்கினளாகலின், ஆகலின் பொருவிறந்தார் என்பதனேடு மாறுகொள்ளும் எனவே மெய்யுறு புணர்ச்சிதகாது. இருவர்தம் காமமுமே தம்முட்புணர்ந்தன. அக்கூட்டத்திற்கு மெய்யுறு புணர்ச் சிக்குச் சொல்லுவன எல்லாம் சுவைபடச் சொல்லுப என்பர் இவ்வாசிரியன்மார்.

இனி மெய்யுறுபுணர்க்சி வேண்டுவார் கூறுவது. வேட்கை எய்தியஞான்றே அவர் மெய்யுற்றுப் புணர்ந்தாராயிற்று. மெய்யுறுபுணர்ச்சி தகாதென்றன்றே உள்ளப்புணர்ச்சி வேண்டுவது. பிறர்பொருளைக்கள்வத்தாற் கள்வேமெனஉள்ளத்தால் உள்ளிலும் தீதேயன்ருே! எனவே மெய்யுறு புணர்ச்சிதகா தென்றுவிலக்கப்படாது, அன்றியுங்கந்தருவர் உள்ளத்தாற் புணர்ந்தாராயின் அஃதுஇவர்க்கும் ஆம்என்பது மெய்யுறவு தகாதெண்ணும் தெரிந்துணர்வு உண்டாமே

எனின்; அன்பினான் நிறைந்தார் என்பதனோடு மாறுகொள்ளும், என்னை? நிறைந்திருந்ததோர் கொள்கலம் பிறிதொன்றற்கு இடங்கொடாததுபோல என்பது.

இவ்விருசார் ஆசிரியன்மாருள்ளும் உள்ளப்புணர்ச்சி வேண்டுவார், மெய்யுறு புணர்ச்சிக்குரிய எல்லாம் உள்ளப் புணர்ச்சிக்கும் உரைப்ப என்பதொவ்வாது. "நறியவும் உளவோ நீயறியும்பூவே" என்றுகூந்தலின்பம் பாராட்டலும், மெய்தொட்டுப் பயிறலும் சுனைவியந்துரைத்தலும் ஏனையவும் அவர் கருத்தோடு முரண்படுமாறு காண்க.

## சொற்பாடு

அ. காட்சி

"இனி' ஒருசாரார் உரைக்குமாறு : மெய்யுறுபுணர்ச்சி தக்கது. இன்சொல்லும் கூற்றுமின்றிப் பசுப்போலப் புணர்ந் தார் என்பது தகாது. சொற்படுகால் முறைமையானிகழ்ந்து புணர்தல் தகவுடைத்து. அவையாவையோவெனின் :-

"காட்சி என்பது இருவரும் தம்முள் கண்ணுறுவது அதற்குச் செய்யுள் :—

"பூமரு கண்ணிணை வண்டாப் புணர்மென் முலையரும்பாத்
தேமரு செவ்வாய் தளிராச் செருச்செந் நிலத்தைவென்ற
மாமருதானையெங் கோன்வையை வார்பொழி லேர்கலந்த
காமரு பூங்கொடி கண்டே களித்தஎங் கண்ணிணையே."

இது தலைமகன்கூற்று. காட்சிக்கண் தலைவி, நாணம் மடம் அச்சம் ஆய குணங்களால் விழுங்கப்பட்டனளாதலின் அவள் பால்கூற்று நிகழாது.

போரினை மேற்கொண்டு பகைவர் தம்புலமாய செந்நிலம் என்றவூரை வெற்றிகொண்ட குதிரைகள் நிறைந்தபோர்ப் படையினையுடைய எங்களரசனாய வழுதிக்கு உரியவையை யாற்றினது கரையிலுள்ள நீண்டபொழிகலத்தே பூவினை மருவு கின்ற இரண்டுவிழிகளாகிய வண்டுகளையும் ஈர்க்கிடைபோகா இணைமென் முலைகளையரும்புகளாகவும் தேன்மருவுகின்ற சிவந்தவாயினைத் தளிராகவும்கொண்டு, அழகுகலந்த, காட்சிக்குவிருப்பத்தை மருவச்செய்யும், பூங்கொடி (போல்வா ளொருத்தி) யைக்கண்டு எம்இரண்டுவிழிகளும் களித்தன. இஃது இச்செய்யுட்குப் பொழிப்புத் திரட்டல்.

'பூமரு கண்ணிணை வண்டா' என்பது பூவினைமருவும் கண்களை வண்டாகவும் கண்ணிணை பூவினை மருவும் வண்டாக வும், எனப்பொருள்தந்து சிறத்தல் காண்க. மாப்படையில் மாண்டவராகலின் 'மாமருதானை' என்றற்குக்குதிரைகள் மருவுகின்றதானை எனப்பொருள் காணப்பட்டது. பெருமை மருவுகின்றதானை என்றுரைப்பினும்அமையுமென்க. நீலமயில்

தன் கோலக்கலாவம் விரித்தாடுதலை நோக்கிநின்ருள் எனவே தலைவியின் விழிகள் கீழே நோக்கிய வண்ணமிருந் தன. எனவே அவ்விழிகளின் பார்வை அவள் நகிலிணை மீதும் பாய்ந்து நிற்பனவாம். ஆகலின் நகிலினை அரும்பாகவும் விழி களை வண்டாகவும் உருவகம் செய்து தலைவி தரைமேற் படிந்த பார்வையினளாய் நின்ற நிலைமையினை உய்த்துணரச் செய்யும் ஆசிரியர் திறம் உன்னி வியக்கற்பாலது. தேமரு செவ்வாய் என்ருர், "பாலொடுதேன் கலந்தற்றே, பனிமொழிவாலெயி றூறிய நீர்" என்பது தெய்வக் குறளாதலின் செந்நிலத்தை வென்ற மாமருதானையென்னவண்டு. அரும்பு, தளிர் என்ற தானைகளால் என் உள்ளம் வென்ருள் என்பான் "காமருபூங் கொடி" என்ருன்,

இங்ஙனம் கூறினன் பெரும்பயனைப் பேராசிரியர் தமது திருக்கோவையார் உரைக்கண் உணர்த்தும்திறம் மகிழற் குரித்து, அதனை ஈண்டுக் காண்க.

"அங்ஙனம் உவமித்துச் சொன்னதனற் பயன் மகிழ்தல்" சொல்லெதிர் பெருஅன் சொல்லியின் புறுதல் புல்லித் தோன்றுங் கைக்கிளைக் குறிப்பே" என்று அகத்திணையியல் சூத்திரத்திற் சொன்னூராகலின் என்பது. அஃதேல் உவகை யென்னும் மெய்ப்பாட்டானே மகிழ்ச்சி பெற்ரும். இனியிச் சொற்கள் விசேடித்து மகிழ்வித்தவாறு எண்ணையெனின், நெஞ்சின் மிக்கது வாய்சோர்ந்து தான் வேட்ட பொருள் வயின் தன் குறிப்பன்றியேயும் சொல் நிகழும். நிகழுந்தோறும் மகிழ்ச்சி தோன்றும் என்பது. என்போல எனின் ஒருவன் தான் வழிபடும் தெய்வத்தைப் பரவிய செய்யுட்களை ஓதி உணர்ந்திருந்தானெனினும் அவற்ருன் அத்தெய்வத்தை வழி படும் போழ்து கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்ப்பக் காண்டும். அல்லதூஉம் சுற்றத்தாரது சாக்காடு முற்ற உணர்ந்தானே எனினும் செத்தாரிடனுகை உரையாடின பொழுது துன்பமீதூரக் கலுழக் காண்டும் இவைபோல என்பது. ஆகலின் நினைப்பின்வழியதுரையாயினும் நினைப் பின் உரைப்பயன் விசேடமுடைத்து என்பது."

இனித், தஞ்சைவாணன் கோவையுடையாரும் "கற்பகத் தின் அயலே பசும்பொற் கொடி நின்றதால்" எனத் தலைவி யைக் கொடியாயே உவமித்தார். இனி இக்காட்சிப் பாடலி னின்றும் சிறிதும் வேறுபடாமல்

" கருந்தடங்கண் வண்டாக செவ்வாய் தளிரா
அரும்பிவர் மென்முலை தொத்தாப்—பெரும்பணைத்தோள்
பெண்டகைப் பொலிந்த பூங்கொடி
கண்டேங் காண்டலும் களித்தவெங் கண்ணே "

எனப் புறப்பொருள் வெண்பா மாலையில் வரும் செய்யுளைக் காண்க. (தொடரும்)

# பாவைப் பாடல்கள்

(நக்கீரன் வழியடிமை வித்துவான், பி. மா. சோமசுந்தரனுர்).

---

## க. பாவைப் பயிற்சி

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னுட்களது ஆம். மனைகள் மாண்பொடு மிளிர்தரப் புனைவு செய்து மலர்மிசை யேகினன் மாணடி வழுத்தும் சீரிய செயலை யாவரும் மேற்கொளலே அதனை மெய்ப்பிக்கும். சிற்றில் இழைத்து அயரும் சேயிழையாரும் சிந்தைக்கும் எட்டாச் சேயோனின் செம்பொற்கழல் அடிபாடிச் சிறப்பெய்துவான் வேண்டிச் செந்தண்மை பூண்டோர் செந்தமிழான் பாவைப் பாடல்களை அருளிச் செய்துள்ளனர். வாதவூரெங்கோன் திருவெம்பாவையினைத் திருவாய் மலர்ந்தும், சூடிக்கொடுத்த சுடர்க்கொடி திருப்பாவையினைச் சூடிக்கொடுத்தும் உள்ளார்கள். இவை ஓதுவார் உள்ளத்தில் இறையன்பும் தமிழறிவும் தளிர்க்கச் செய்வன.

இப்பாக்களைச் சிறுர்க்கு ஓதுவித்தல் வேண்டும் எனவும் அவைகளை மனனம் செய்வதில் வல்ல சிறுர்க்குப் பரிசில் வழங்கப்படல் வேண்டும் எனவும் வணக்கத்துக்குரிய சீரியர் காஞ்சி சங்கர ஆசிரியர் அவர்கள் அறிவுறுத்தி அது செயற்படற்கு ஆவன விழைவொடு அருளியும் வருகின்றுர்கள். பாடல்கள் ஓதும் பயனறியாதாரையும் பரிசில் காட்டி ஊக்குவித்துப் பாலர்பால் தெய்வ நெறிக்கும் தமிழ் அறிவுக்கும் வித்திடும் அவ்வித்தகச் செம்மலாரை எம்போன்றுர் ஏத்தி இன்புறலே செயற்பாலது. ஆயினும், அன்மையில் "சைவ வைணவப் பாவைகள் (ஆராய்ச்சி)" என்ற பெயரியதோர் சிறுநூலைக் கண்ணுற்றனம். அதன் ஆசிரியர் சித்தாந்த பண்டித பூஷணம் திரு. ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளையவர்கள். அது புலவன் மாரையும், ஏனைய புரைதீர்ந்த பெரியோரையும் வடுக்கண்டு அமைதலின், அனைவர்க்கும் அக்கருத்துக்களை உணர்த்துவான் எடுத்துக் கொண்டதே இக்கட்டுரையின் குறிக்கோள் என்க.

## உ. சைவமும் வைணமும்

சைவ சமயத்தினர் மறந்தும் புறம் (திருமாலைத்) தொழுதலும் வைணவர் மறந்தும் புறம் (சிவனைத்) தொழுதலும் சமயக்கற்பை அழிக்கும். என்னை? கொற்றனும் கணவனும் தன்மை உடையான். சாத்தனும் கணவனும் தன்மை உடையான். கணவன் என்ற பொதுத்தன்மை பற்றிச் சாத்தன் மனைவியர் கொற்றனையும், கொற்றன் மனைவியர் சாத்தனையும்

மருவுதல் செய்யார். அதுபோலக் கடவுள் என்ற பொதுப் பெயரைக் கண்டு சைவர் திருமாலையும் வைணவர் சிவனையும் வழிபடலாகாது.

இஃது அவர்கூற்று. சாத்தனுங் கொற்றனும் உடம்பானும் உயிரானும் உணர்வானும் ஏனைய நீர்மையானும் வேறுபட்டவர் என்பதும் இறைவனோ அவ்வாறின்றி ஒருவனையே நின்று சிவனுயும் திருமாலாயும் தலையளி செய்கின்றான் என்பதையும் ஆசிரியர் உணராராயினர். உலகங்களையும் உயிர்த் தொகுதிகளையும் ஆக்கி அளித்துக்காக்கும் இறைவன் ஒருவனே என்பது.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"

என்ற திருமூலர் திருவாக்கானறியப்படும். அவவொருவனே பலபெயரான் தொழப்படுபவன் என்பது,

"ஒருநாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க் காயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டேமோ"

என்ற திருமொழியானும் தேறப்படும். பற்பல சமயத்தினர் பற்பல் பெயர்களான் பற்பல் முறைகளான் வணங்கினும் அஃது அப்பரம் பொருளையே சாரும் என்பது,

"விரிவிலா அறிவி னார்கள் வேறொரு சமயம் செய்தே
எரிவினாற் சொன்ன ரேனும் எம்பிராற் கேற்ற தாகும்"

என்று அப்பர்பெருமான் அருளிச் செய்கையானும் உணரப்படும். இவ்வாறு உணர்வ தில்லாமையே யன்றியும் உணரவும் மறுப்பார் போன்று,

"சிவன் விஷ்ணு என்பன ஒரே கடவுட்குரிய வேறு வேறு பெயர்கள் என வாதிப்பார் சிலர். அமரகோசம் அப்படிச் சொல்லுகிறதா? அமர கோசமாவது சொற்பொருள் கூறும் வடநூல்."

என்றார் நூலாசிரியர். சைவசமய குரவர்கள் தம் அருளிப்பாடுகளைப் புறம்போக்கி அமர கோசத்தைத் துணை அழைப்பானேன்? அமரகோசம் ஆண்டவனைப் படைத்ததா? கண்டேனும் தெளிந்ததா? இறைவனுக்கு இலக்கணம் வகுக்கும் வன்மைத்தா? இறைவன் அதன் சார்பு பற்றியே இயக்கம் பெறுகின்றானா? வடநூல்களுள் பெரும்பாலான தமிழினின்றும் களவு கொண்டவையே என்பதைப் பரிதி மாற் கலைஞர் என்னும் வி. கோ. சூரிய நாராயண சாத்திரியார். பி. ஏ. அவர்கள் உரைப்பதை உணர்ந்தேனும் இவ்வாசிரியர் தமிழ்நூல்களில் சான்று தேடுவாராக.

## ௩. பாவைகளும் சங்கர ஆசிரியரும்

சங்கர ஆசிரியர் மாயாவாதச் சமயத்தினர். அவர் திருப்பாவை, திருவெம்பாவை மாநாடு கூட்டல் சைவமும் வைணவமும் சரிந்திடவும் மாயாவாதம் மேலோங்கவுமே அடிகோலும்.

இஃது நூலாசிரியரின் குற்றச்சாட்டு. சங்கரரை அவர் தூற்றும் உரைகளை யெல்லாம் ஈண்டு எடுத்துரைக்க இடமில்லை( ஆயினும் அவர் கூற்று அளவு மீறிய சமய வெறியையும் சாத்திர ஏட்டின் பற்றையுமே காட்டும். இப்பெரியார்.

> "சாத்தி ரம்பல பேசுஞ் சழக்கர்கள்
> கோத்திர முங்குல முங்கொண் டென்செய்வீர்"

என்று அப்பர் பெருமான் அருளிச் செய்கையையும்

> "சாதியும் மதமும் சமயமும் தவிர்ந்தேன்
> சாத்திரக் குப்பையும் தணந்தேன்"

என்று வடலூர் வள்ளலார் அருளிச் செய்கையையும் உணரார் போலும். சங்கரர் மாயாவாதச் சமயத்தினர். எனவே சிவனையும் திருமாலையும் வழிபடலாகாதோ? தேவாரப்பாடல்களை ஓதல் ஒவ்வாதோ? ஆயின் "மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே" என மணிவாசகர் அழைத்தது சைவசித்தாந்த பூஷணங்களை மட்டுமா? தாம் அரிதிற் பெற்ற ஞானத்தை இராமானுசர் அள்ளி வீசியது வைணவர்க்கேயா? அன்று. மாந்தரனைவரையுங் குறிக்கொண்டே கூறினர் எனின் சங்கர ஆசிரியர் போன்ற சீலம் மிக்க சான்றோர்கள் ஏன் தழுவலாகாது? அல்லது தம்மைப் போன்றே அப்பெரியாரும் மெய்ப்பொருளைக் கையிகந்து சமயமயல் பிடித்தொழுக வேண்டுமென அவாவுகின்றாரா?

அன்றியும் திருப்பாவை திருவெம்பாவைகளை நூலாசிரியர் போன்ற பெரியோரை ஓதும்படி கூறினாரில்லையே? தெய்வத்துக் கிணையான மழலை மொழிப் பிள்ளைகளைப் பயிற்றுவிக்கும்படி தானே கூறினார். அன்றி அச்சிறார் மனத்தும் சமயவெறி புகுத்தல் வேண்டுமென்பது சைவசித்தாந்தத்தின் விதியா?

சங்கர ஆசிரியர் பாவைப் பயிற்சி தொடக்கம் செய்யுங் காலத்தும் அதற்கு முன்பும் இந்நூலாசிரியர் போன்றார் நிலவுலகில்தானே வாழ்ந்திருந்தனர். அஞ்ஞான்று இவர்கள் திருவெம்பாவையைப் பரப்பத் தங்கள் திருமேனியை அசைத்ததுண்டா? ஊர் ஊராகச் சென்று பிரச்சாரம் செய்தனரா? இல்லை. எம்மிடம் படை, பணம் இல்லையென்ற

கூற்று மேவாது. என்னே? சைவப்பாதிரியார் திரு. S. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் ஊரானோர் வார வழிபாட்டுக் கழகத்தைத் தனி ஒருவராய் நின்றன்றோ அமைத்துத் தொண்டாற்றினர்! அவ்வாறு பன்னிரு திருமுறைகளையும் பரப்பும் பணியை மேற்கொள்ளாது அவம் செய்து, பரப்ப முயல்வோரையும் பழிப்புரை கூறிப்பேசுதல் அழகன்று.

## 4. திருப்பாவை உரை

திருப்பாவையின் உட்பொருளெனப் பெரியவாச்சான் பிள்ளையின் விரிவுரையை நூலாசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார். செத்தமொழியாகிய மணிமிடை பவளத்தினலியன்ற அஃது திருப்பாவைக்கு உரையாக அமையாமல் ஏதேதோ காமன் நூலுக்கு விரிவுரை கூறுகிறது, 'இலக்கணக் கவிஞர் சொல்இன்பம் தேடுவர், மலக்கு சொல்தேடுவர் வன்கணரே' என்றபடி மலக்கு சொற்களே மலிந்துகிடப்பது. பெரியவாச்சான் பிள்ளையிடம் பெருமதிப்புடையோர் இச்சிறுமதியேனைப் பொறுத்தருள்க.

> "நாமும் நம்பாவைக்குச் சாற்றி நீராடினல்—நாட்டார்க்கு நோன்பு என்றொரு வ்யாஜத்தையிட்டு நம்முடைய விரஹதாபம் போகநாம் குளித்தால், நோன்பென்றொரு வ்யாஜத்தையிட்டு க்ருஷ்ண ஸம்ச்லேஷத்தைப் பண்ணினு லென்றுமாம்."

என்றஉரை ஆண்டாளின் தூய உணர்வை எத்துணை மாசுபடுத்துவது! உன்னிப்பார்மின்!! க்ருஷ்ண சம்ச்லேஷம் என்பது கிருட்டிணனோடு உடற்புணர்ச்சி பெறுகைஎன்பது. கண்ணன் உடல்மேல் காமுறுதலே திருப்பாவையின் உட்பொருளாமோ?

> "பாற்கடலுள்
> பையத் துயின்ற பரம னடிபாடி
> நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
> மெய்யிட்டு நாமெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
> செய்யா தனசெய்யோம் தீக்குறளை சென்றோதோம்
> ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
> உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்"

கண்ணனோடு காமப்புணர்ச்சி விழைவார் இவ்வண்ணம் ஒழுகுவரோ? நெய்யுணாது, பாலுணாது, மெய்யிட்டெழுதாது மலரிட்டு முடியாதொழுகும் பெண்கள் காமப்புணர்ச்சிக்கு எத்துணைத்தகுதியுடையா ரென்பதை உரைகாரரும் உணர்ந்தாரில்லை, நூலாசிரியரும் உணர்ந்தாரில்லை. என்னே?

> "கொங்கைமேற் குங்குமத்தின் குழம்பழிய என்கிற படியே க்ருஷ்ணனுடைய வரவைக் கடாக்ஷித்து அவன்

எப்போது வந்து மேல்விழும் என்று அறியாதபடி யாலே
தங்களை எப்போதும் அலங்கரித்த படியே
யிருப்பார்க ளென்றுமாம்,''

என்றுபேசும் உரைகாரரும் அதனையே திருப்பாவையின் மெய்ப்பொருள் எனவழக்கிடும் நூலாசிரியரும் அறிவு பெருகி வரும் இருபதாம் நூற்றுண்டுக்குரியரன்று, கல்லாமாந்தர் பெருகியிருப்ப அவர்நடுவண் ஆத்திசூடி மட்டும் கற்றுவிட்டு தமிழ்ப்புலவன் மாரெனத் தருக்கித்திரிந்த 17, 18ஆம் நூற்ருண்டுகளுக்கே உரியர். அவரும் ஞான உரைகாரர் எனப் போற்றப்படுவார். இவரும் சித்தாந்த சரபமாகிச் சிறப்பார்.

## 5. சமயமும் புலவன் மாரும்

மீண்டும் ஒருமுறை சங்கர ஆசிரியரைப் பழிபாராட்டும் படலம் துவக்கிவிட்டுள்ளார். அத்துடன் உள்ளம் அமையாது,

> "ஆனல் சைவசாத்திர வல்லுந ரெனப்படுவோருள் மிகப்பெரும் பகுதியினர் தமிழ் வெறியினராய் வட மொழித் துவேஷிகளாய்த் தம்சமயப்பிரமாண சாத்திர வரம்பு, குரு சந்தான விசுவாசம், ஏனைய ஆசார அனுட்டானங்கள் எல்லாவற்றையும் தத்தம் பண்ணிவிட்டு வரம் பழிந்து பேசுசின்றனர். எழுதுகின்றனர்,''

எனக்குற்றம் காண்கிருர் நூலாசிரியர். இவ்வண்ணம் சைவசமயஞ்சார்ந்த இச்சிறியேற்கும் ஏனைய பேராசிரியன் மார்க்கும் இவர் சொல்லினுல் சுட்டவடுவை வழங்கியுள்ளார்.

தமிழ்மொழியின்பால் கனிந்த அன்பு கொள்ளுதல் தமிழ் வெறிஆம் எனின் அத்தகைய வெறியை அகங்களித்து வரவேற்க உண்மைப்புலவர் எவரும் தயங்கார். தாயின்மீது அன்பூற்றல் பணிபுரியும் நன்மகனை நோக்கி "இஃதென்னை உனக்கு இத்தனை தாய்வெறி. இவளிடத்தும் நீஅன்பு பாராட் டத்தகும்'' எனப்பரத்தை ஒருத்தியைக் காட்டுதல் போலுளது ஆசிரியர் கூற்று.

எம்மை ஈன்றது தமிழ் முதன்முதலில் தாய்ப்பாலோடு சேர்த்துச் சுவைத்தது தீந்தமிழ் அமுதம். எம்நாவை முதல் முதல் அசைத்தது தமிழ். எம்மை வளர்த்தது தமிழ். அறிவு றுத்தியது தமிழ். அறிபவனும் அவனே அறிவுறுத்துபவனும் அவனே என்பரே. அம்மெய்ம்மையை அறிவுறுத்தியதும் தமிழ். இறைவன் உண்டென எனக்கு இயம்பியது தமிழ், இறைவனைச் சிவனுர் எனச்சிந்திக்கச் செய்தது தமிழ் மூச்சும் பேச்சும் முழுமுதற் பொருளும் தமிழா யிருப்பப்புலவன் மாரைத் தமிழ்வெறியர் எனல் இயையுமா? குருசந்தான விசுவாசம் இல்லை யென்றனரே! இவ்வா றெல்லாம் அறிவித்த தமிழ் எமக்குக்குருவாம் அன்றே? அவ்விசுவாசம் தமிழ்வெறி

ஆகுமா? அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமன்றோ? அவரை அறிவித்தும் எமக்கும் அன்னையாய் அருளுவதும் தமிழேயன்றோ?

புலவன்மார் தமிழ்வெறியரா? ஆயின் "அர்ச்சனைபாட்டே ஆகுமாதலின் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடு" கென்ற சிவனும் தமிழ்வெறியர்! வடமறை யோலிட்டலறியே தொடர்தரத்தன்னை தண்டமிழ்ப்பின்னே படர்தரும் பச்சைப் புய"லும் தமிழ்வெறியர் 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்ற மணிவாசகரும் தமிழ்வெறியர். தீந்தமிழான் தேவாரப் பாக்களையருளிய சைவசமய குரவரும் தமிழ்வெறியர். 'முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும்' முருகப் பெருமானர். தமிழ்வெறியரின் தலைவர் ஐயகோ! இவ்வாறு யாண்டும் யாவரும் தமிழ்வெறி கொண்டு தருக் குறுகின்றனரே,!

தமிழ்நாட்டில் சைவந் தழைத்துள்ளது. தழைக்க வைக்கப்புலவரும் தோன்றுவர். அவர் அனைவரும் தமிழ்வெறி பிடித்தலைவர். அவ்வெறி பற்றாத நூலாசிரியர், இத்தாலி, பிரான்சு போன்ற மேனாடுகட்குச் சென்று கிறித்திவக் குருமாரைபபோலச் சைவப் பயிரிட்லாமே! ஈண்டிருந்து போதை சமயப்போதையில் போக்குவானேன்?

## 6. சமயமும் மடாதிபதிகளும்

"சைவாதீன கர்த்தரொருவர் காவியுடை அணிந்து பதவியிலிருந்து கொண்டே கரிச்சட்டைக்காரரின் கொள்கையைத் தழுவலானர்"

குன்றக்குடி அடிகளாரைக் குறித்தது நூலாசிரியரின் இக்கூற்று. 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள், மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றகுறளை ஆசிரியர் அறிவாரா? உண்மையை யார் கூறினும் ஏற்பதே அறிவு. அவ்வாறு ஏற்பதால் சைவசமயத்தும் சித்தாந்தம் பேசிடும் சீரழிவுக்கிடமான கொள்கைகள் சமயத்தைவிட்டு விலகும், சமயம் உயரும். இதை ஆசிரியர் உணர்வாராக,

"மற்றொரு சைவாதீனம் அறப்பணிக்கென ஏறக்குறைய எழுபது லட்சரூபா ஒதுக்கியுள்ளது, அதில் சைவசித்தாந்தத்தைப் பரப்புதற்கென ஒதுக்கப்பட்டது. 44 இல் ஒருபங்கு எனத்தெரிகிறது. சைவாதீனங்களின் சொத்துக்களும் சைவ சமயவளர்ச்சி ஒன்றிற்கேஉரியன. அந்தப்பிரதானத்துக்கு அனுகூலமல்லாத பிரதிகூலமாகக் கூடியவழியில் அச்செலவங்கள் செலவாகலாமா?"

இது திருப்பனந்தாள் மடத்தைக் குறித்தெழுந்தது. அவர்கள் கல்வி அபிவிருத்திக் கெனச் செலவிடுதலைக் கண்டித்தெழுந்தது. என்னை? மக்கள் கல்வியாகிய கண்ணி

லாது மடமையிலே ஆழ்ந்திருந்தாலன்றோ ஆசிரியர் போன்றோருக்குவாழ்வுண்டு! கல்விக்குச் செலவிடுதலைக் கண்டித்தல் கயமைத்தனம் ஆகும். இத்தன்மையோர் சைவராய் இருத்தல் சைவத்துக்கும் செந்தமிழுக்கும் ஊறுவிளைப்பதாகும் என்க.

## 7. சமய விளக்கம்

இத்தகு சிறுநூலை எழுதுதலும் வெளியிடலும் சிறுமதியாளர் செயல், அவர்தம் சிறுமதி அத்துடன் அமையவில்லை, அதன்படி ஒன்றை வாலாசைப்பேட்டையில் வதியும் எமது நண்பர் திரு. பார்த்தசாரதி என்பார்க்கு அனுப்பினர். அவர் வைணவர்' வைணவராயினும் சமயப் பொதுநோக்குடன் அவ்வூர் ஏகாம்பரஈசுரர் ஆலயத்து நாயன்மார்கள் திருநட்சத்திரப்பணிபுரிபவர். அன்னாருக்குப் பெரியவாச்சான் பிள்ளையின் காமக்களியாட்டங்களே நிறைந்த இந்நூலை அனுப்பி வைத்தல் ஈனமான செயலாகும் என்க.

சமயம் என்பது யாது? மன்னு உலகத்து மரபுணர்ந்து தாம் மன்னுதல் குறித்தமாந்தர், தம்மை இவண் உய்த்து ஓம்பித்தலையளி செய்யும் தலைவன்றன் இணையடிகளைப் புணை எனப்பற்றி அந்தமிலின்பத்து அழிவில் வீடுபேறுஎய்துவர். தலைவனை அறியுந்திரு பலபிறவிகளும் முயன்ற அருந்தவத்தானே உறுவதுஎன்க. ''யான்பெற்ற இன்பம்பெறுக இவ்வையகம்' என்னும் பேரருள் நோக்குப் பெற்றிமையான் அத்தவத் திருவினர் தரணியோரும் தனியொரு தலைவனுய அவனைத் தேர்ந்துய்யும் வண்ணம் அவனை அடையும் நெறிகளை அருளிச் சென்றனர். அந்நெறிகளே சமயங்கள் என்னும் பெயர் கொண்டு சிறந்தன என்று அறிக.

சைவசித்தாந்தை மேற்கொண்டொழுகிய பெரியாருள் மறைமலையடிகள் தலைசிறந்தாராவர் அப்பெரியார் 'சமயங்கள்' பற்றிக்கூறிய கருத்துக்களை இவண் தந்தமைதல் சாலும்.

தீக்கொழுந்திற் காணப்படும் செவ்வொளியே சிவபெருமானாகவும் அவ்வொளியில் அடங்கிச் சிறிதே தோன்றும் நீல ஒளியே உமையம்மையாகவும்வைத்து வணங்கப்பட்டன. கடவுளைப் பெண் வடிவில் (உமையம்மையாக) வைத்து வழிபாடுபுரிதல் தமக்கு இழிவெனக்கருதி அம்மையையும் அப்பனாக்கி, அவற்கு மாயோன் திருமால் என்னும் பெயர்களைப் புனைந்துவிடலாயினர்.''

''இங்ஙனம் சிவாபிரானையும் அம்மையையுமே அன்றி, அவரின் வேறாகாமல் அவர்தம் புதல்வராகக் கருதப்படும் முருகவேளையும் யானைமுகப் பிரானையும் அம்மையின் நீலவுருவேவாய்ந்து அவரின் வேறாகாத திருமாலையும் முழுமுதற் கடவுளுக்கு அடுத்தபடியில் வைத்து வணங்குதல் இழுக்கன்று''.

# பாட்டும் பயனும்

[வித்துவான். சொ. சிங்காரவேலன், எம். ஏ.,]
[மொழியியல் துறை; அண்ணாமலைப் பல்கலைக்கழகம்]

உலகப்படைப்பில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிறப்புடையதாகவே திகழ்கின்றது. என்றாலும் சிற்சில படைப்புக்கள் அனைத்தினும் மேம்பட்டு விளக்கக் காண்கின்றோம். அவற்றைக் காணுந்தொறும் காணுந்தொறும் கழிபேரின்பம் எய்துகின்றோம். அத்தகு சீரிய படைப்புக்களில் ஒன்றே பாட்டு எனலாம். எம்மொழியில் தோன்றியதாயினும் பாட்டு எல்லோரையும் கவர்கின்றது. பொருள் புரிந்தாலும் புரியாவிட்டாலும் பாட்டில்—அதன் ஒலிநயத்தில்—ஓசையின்பத்தில் உள்ளம் ஆழ்ந்து விடுகின்றது. உறங்குவது போன்ற நிலைக்கு உள்ளத்தை பாட்டு ஈர்த்துச் சென்றுவிடுகின்றது. 'பாட்டுக்கு ஈடுபாட்டே' என்பது தேர்ந்து தெளிந்த திறனாய்வாளர் முடிவு. 'இந்த உலகம் முழுமையும் ஒன்றுபட்டு நிற்றல் வேண்டும், உலக வாழ்வு செம்மையாதல் வேண்டும்' என்று இக்காலச் சிந்தனையாளர்கள் முழங்குதல் நம் செவிகளில் விழுகின்றது. இதற்கு இலக்கிய ஒருமை அடிப்படையான ஒன்றாக உள்ளது; இலக்கியம்—அல்லது அதன் கூறுகளில் முடிமணியாக விளங்கும் கவிதை ஒருமை உலகின் ஒருமையை வளர்க்கத்தக்க உயர்கருவியாகும்.

"பாட்டுத் திறத்தாலே—இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்"

என்று கவிஞர் பாரதி கூறுவது புனைந்துரையுமன்று; உயர்வு நவிற்சியும் அன்று; உண்மை உரையேயாகும். இதனாலேயே பாட்டுக் கலையைப் பற்றி ஆராயும் திறனாய்வாளர் முடிவுகள். அனைத்தும் ஒன்றாகவே உள்ளன. திறனாய்வாளர் கவிதைக் கலைபற்றி ஆய்ந்துரைக்கும் முடிவுகள் யாவும் எல்லா மொழிக் கவிதைகளுக்கும் இசைந்தவையாக உள்ளன. இத்தகு செம்மை பாட்டில் உள்ளமையைச் சிறிது சிந்திப்போம்.

---

என்றது காண்க. அன்றியும் சைவநூல் விதிப்படி திருமாலும் சிவனாரின் திருமேனியிலொரு கூறாயிருப்பவராகலின் அவரை அவமதித்தலும் வணங்கேன் எனலும் சிவனாரின் திருமேனியிலொருபங்கை அவமதித்தலும் வணங்கேன் எனலும் ஆம்என்பதை இச்சித்தாந்த வித்தகர் உணர்வாராக.

கவிதையில் ஈடுபட்டிருக்கும் உயர்பெருங் கவிஞர்களுக்கு இயற்கைப் பொருள்கள் அனைத்தும் உயிர்ப் பொருள்களாகவே தோற்றமளிக்கின்றன. அவர்கள் அவற்றோடு பேசுகிறார்கள்; உரையாடுகிறார்கள்; உறவாடுகிறார்கள். கிளைகளில் இருந்து கீதம் இசைக்கும் குயில்களுடைய மொழி அவர்களுடைய ஆன்மீக உணர்வுக்குப் புலன் ஆகின்றது; மலர்களில் இருந்து தேனையுண்டு ஒலிக்கும் வண்டுகளின் ஒழுகிய ஓசையிலே அவர்களுக்கு நாம் கேளாத பண் எல்லாம் கேட்கின்றது. அவர்கள் நம்மனோர்க்கில்லாத நுண்புலன் உடையவர்களாக விளங்குதலால், நுண்காட்சிகளை யெல்லாம் கண்டு களிக்கின்றார்கள்; நம்மையும் களிப்பிக்கின்றார்கள். தாம் இன்புறுதல்—உலகு இன்புறுதல் என்ற இரண்டும் அவர்களுடைய கவிதை முயற்சியில் தாமே வந்து எய்துகின்றன. * 1

ஒரு கவிஞரின் பாட்டு ஒன்று. *2 அவர் கவிஞர் மட்டும் அல்லர்; அருளாளர். திருவருள் வெள்ளத்தில் திளைத்த அறநெறியாளர்; அறிவு விளக்கம் எல்லாம் பெற்று, அவற்றின் எல்லைகண்டு,—இடர்பல நீந்தி, அநுபவ நெறிக்கு இறுதியில் வந்து அகம் குழைந்து அழும் அருளாளர்; அப்பரடிகள். சோழ நாட்டிலே, காவிரிக் கரையிலே சோலைநடுவிலே அமைந்துள்ள ஒரு சிற்றூர் திருப்பழனம் அங்குள்ள இறைவன் திருவருளில் ஈடுபட்டுத் தோய்ந்த அடிகள் திருவாயினின்றும் கவிதை மலர்கின்றது; தமிழ்ப்பாடலாகத் தழைக்கின்றது; மிக அருமையான பண்ணிலே, 'ஆம்' பழந்தக்கராகப் பண்ணிலே, வெளிவருகிறது பாடல். பாடலில் அழகான அநுபவம்; பெண்மை அநுபவம்; பழனத்துறையும் பரமனிடம் ஈடுபட்ட பெண் ஒருத்தி பேசுகின்ற காதல் அநுபவம். இறைவன் தன் உள்ளத்தோடு உள்ளமாக ஒன்றி, உயிர்க்கு உயிராகக் கலந்து, பிரிந்து வேறாய் நிற்கும் நிலையில்,* பிரிவுத் துயரம் தாளாது வருந்துகின்றாள்ளாம் அந்தப் பெண். காதல் நெறியில் இவ்வாறு கனிந்த பக்தியை வெளியிடும் முறுகிய அன்பு—'மதுர பக்தி'—அப்பரடிகளுடைய அற்புதமான கவிதைக் கிண்ணத்திலே அழகுற வெளிப்பட்டிருக்கிறது.

அந்த ஊரில் சோலைகள் அதிகம். எங்குக் காணினும் சோலைகள்; சோலைகள் வளமாக இருந்தால் அங்குக் குயிலினங்கட்குக் கொண்டாட்டந்தானே. "ஏ குயில்களே!" எனத்

---

* 1. திருக்குறள்—கல்வி—9.

* 2. அப்பர்—நான்காம் திருமுறை—திருப்பழனம்.

* "He is the ear of our ears, the mind of our minds, the speech of our speeches. He is the soul of our souls and the eye of our eyes" Kenopanishad, Khanda I Sloka 2,

தொடங்கிய பெண், "சென்று என் நிலையைத் தலைவரிடம் கூறுங்கள்" என்கிறாள்: அவை இசைக்கும் குரலிலே, சொல்லும், பொருளும் இணைந்து ஓர் அழகிய காவியம் பயில் கின்றது என்பது அவள் கருத்து.

> "சொல் மாலை பயில்கின்ற குயில் இனங்காள்
> சொல்லீரே!"

கவிதையின் முதல்வரியே இன்பம்; இன்பம். 'சொல்லீரே என்ற சொல்லில் பெண்மையின் ஏக்கம், வேதனை இரண்டும் பளிச்சிடக் காண்கின்றோம். சொல்லீரே என்ற சொல்லுக்குச் 'சொல்லமாட்டீர்களா' என்றும் 'சொல்லுவீர்' என்றும் ஆகிய இரண்டு பொருளைத்தான் அகராதி காட்டக்கூடும். ஆனால் கெஞ்சுகின்ற நிலையில், பணிந்து குறை முடிக்க இரக்கின்ற பான்மையில் அச்சொல் இந்த இடத்தில் நின்று பெற் றிருக்கும் உயர்ந்த சிறப்பு நினைப்புக்கும் எட்டாதது. மிக எளிய சொல்லே, அரிய ஆட்சிச் சிறப்பால் ஒளி பெற்றுத் திகழும் என்பதற்கு இதுவே சான்று. ஒரு குயிலைப் பார்த்துக் கேட்டால் கூட, அது மறுத்துவிட்டாலும் மறுக்கக்கூடும். கூடியிருக்கும் குயில் இனம் முழுதுக்குமே வேண்டுகோள் விடுக்கும் பாங்கு அறியத்தக்கது' ஒன்று சொல்லிவிட்டாலும், மற்றொன்றுவது சொல்லும் என்ற நம்பிக்கையும், பிறிதொன் றுவது சொல்லாதா என்ற ஏக்கவுணர்வும் ஆகிய இரண்டும் 'குயில்—இனங்காள்' என்ற தொடரில் உள்ளன. 'நாங்கள் அஃறிணை உயிர்கள் தாமே! எமக்குச் சொல்லும் தன்மை இல்லையே' என்று அக்குயில்கள் சொல்லிவிடவும் கூடும் என்று நினைக்கின்றாள் போலும் தலைவி; 'சொல்லை மாலையாக்கி அழகுறப் புனைந்து பெய்து உரையாடும் இயல்பு உங்களுக்கு மிக எளிதானதுதான்' என்பதை விளக்குவதே சொல்மாலை பயில்கின்ற' என்ற தொடர்ச் சிறப்பு ஆகும். பயிலுதல் என்பது பெரும்பான்மை குறிக்க வழங்கும் அழகிய தமிழ்ச் சொல். அதனை இவரிடத்தே வைத்து அமைத்தது பிறி தொரு சிறப்பு ஆகும்.

'யாரிடத்துச் சொல்லவேண்டும்' என்று இயல்பாக இதன்பின் எழக்கூடிய வினவுக்கு விளக்கம் தருவதுபோல் எழுகின்றது கவிதையின் அடுத்தவரி, குயில்கள் சொல்மாலை பயில்வன ஆதலின் அவற்றுக்குப் பண்ணின் இனிமை எளிதில் விளங்கக் கூடியதே. 'பண்முழங்கும் இப்பழனமே அவனுடைய ஊர்; அவன் இப்பழனத்தின் தலைவன்' என்பது விளக்கம், மிக்க செல்வர்கள் வாழ்கின்ற ஊர் அது. செல்வர்கள் வாழ்க்கையை வளமாகச்' சுவைத்து வாழும் இயல்பினர்; அவர்கள் பல்வேறு நிறத்தவாய், பல்வேறு மணத்தவாய் உள்ள வெவ்வேறு அழகிய மாலைகளை அணிந்து வாழ்வர்; அம்மாலை

களில் எல்லாம் புதுநலம் கருதி வண்டுகள் ஒலித்து வட்டமிடும், அந்தப்பண்ணின் முழக்கமே அந்தஊர் முழுதும் என்பது விளக்கம்.

'பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும்
பழனத்தான்'

இப்போது விளக்கம் வந்துவிட்டது. வண்டு பண்மிழற்றும் என்பதைக் கவிஞர் சுட்டினாலும், அவர் வண்டிற்குக் கொடுக்கும். அடைமொழி சிறந்து விளக்குகின்றது. 'வரி' என்பது தமிழில் ஒருபாடல் வகையையும் குறிக்கும்; 'கானல் வரி', 'ஊர்சூழ்வரி' முதலியன காண்க. வண்டின் மேற்புறத்துக் கோடுகளை 'வரி' என்பது குறிக்குமே யாயினும் 'வரிப்பாடலில் சிறந்து விளங்கும் வண்டு பண்மிழற்றும்' என்று பொருள் கொள்ளற்கு ஏற்றவாறு இவ்வரி கவிதைச்சிறப்பொடு திகழ்கின்றது.

'இனி இறைவனுடைய திருவுருவச்சிறப்பில் ஆழ்ந்து ஈடுபட்ட அடிகள் அவனுடைய திருவுருவ அமைப்பில் தோய்ந்து விடுகின்றார். இறைவன் திருமார்பில் கிடக்கும் முன் மாலை, முடியிற்கிடக்கும் சிரிக்கின்றபிறை, அப்பிறை விளங்கும் அழகுறு சென்னி, திருமார்பிற்கிடந்து ஒளிவிரிக்கும் பொன் மாலை எல்லாம் அடிகள் திருவுள்ளத்தில் காட்சியாக மலர் கின்றன; பாடலின் மூன்றும் பகுதியாகிய இது மலர்கின்ற அழகு.

முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கும்
முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பன்,,

அடிகள் பெண்ணின் ஏக்கத்தைப் பிழிந்துரைக்கும் பகுதி யாகிய இது கவிதையின் முடிப்பகுதியாக வந்து கவிதை இன்பத்தை எடுத்துரைக்கின்றது.

''என் புதுநலம் உண்டு இகழ்வானோ''

உண்ணுதபொருளை உண்ணவியலாத பொருளை உண்டன போலக் கூறலும் தமிழ்மரபு என்பர். தன்நலத்தை நுகர்ந்த தலைவன் தன்னை இகழ்ந்து விடுவானோ என்ற பெண்ணின் ஏக்கம், 'சொல்லீரே' என்ற கவிதையின் தொடக்கக் குறிப் பிற்கு அடிப்படையாய் நின்று இணைக்கின்றது.

இக்கவிதையின் யாப்புமுறையே இனியதாக உள்ளது. முதல்மூன்று சீர்கள் நெடுஞ்சீர்களாக வந்து, இறுதிச்சீர் குறுஞ்சீராக இருந்தால் அது வேறு உணர்ச்சி நிலை, வெளி யீடாக இருக்கும்; எல்லாம் நெடுஞ்சீர்களாகவே வருவது, அவனைச் சேர்ந்தபோது உண்டாய இன்பத்தின் நினைவில்

வரும் ஓர் ஒழுங்கான அமைப்பு முறையே ஆகும். இந்த யாப்பு நெறியில் உட்பட்டு எழுந்த கவிதையைப் படிக்கும் போதும், இவ்வின்ப வேதனை நமக்கு எழுகின்றது எனும்படி இது திகழ்கின்றது.

இககவிதையைப்பாடிய அடிகள் 'தம்மை மறந்தலயம் தன்னில் இருந்து' பாடியருளியுள்ளார். இக்கவிதையை இதற்கென அமைந்த பண்முறையிலும் பாடியின்புறுதல் வேண்டும். அந்தப்பண்ணை அறியாத நிலையிலேயே, பாட்டின் ஓவியம் நம்சிந்தையைக் கவருமேயாயின், பண்ணும் தெரிந்து பாடினால் இக்கவிதை உள்ளத்திற் சென்று தோய்ந்து இன்புறுத்துதல் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? அதுவே பாட்டின்பயன் ஆகும்.

இத்தகு கவிதைகளில் கவிஞர்களின் அகக்காட்சி புலனாகின்றது. அவர்களுடைய தூயஉள்ளங்களின் ஒளி அக்கவிதைகளில் துவங்குகின்றது; அவர்களுடைய அநுபவங்களின் தேக்கம் அக்கவிதைகளில் நிழலாடுகின்றது. அக்கவிதைகளைப் பாடி மகிழும்பேறு வாய்த்தல் மிக அரியதாகும். அறிவு படைத்த அனைவரும், அறிவியல் இன்பம் மட்டும் அடைவதனாலேயே மனநிறைவு உண்டாகிறது, இன்னுச் சுருங்கச் சொன்னால், உணர்வியல் நிலையே உள்ளத்தைப பண்படுத்துகிறது; உயர்த்துகிறது. வாழ்விக்கின்றது, அதை எளிதிற் பெற வழி யாது? உயர்ந்த கவிஞர்களின் இதய வெளியீடாகிய கவிதைகளை வாழ்வில் ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் படிப்பதும், சிந்தனை செய்வதுமே ஆகும். அவ்வாறு பெறும் அநுபவமே வேண்டத்தக்கதும் விரும்பத்தக்கதும் ஆகும்.* "பாட்டும் பொருளும், பொருளாற் பொருந்தும் பயனும் என்பாற் கூட்டும்படி நின் கடைக்கண் நல்காய்" என்று குமரகுருபரர் கலைமகளை வேண்டித் தொழும் பகுதி நம் நினைவில் இருத்தத்தக்கதாகும்.

இனி அப்பர் அருளிய அவ் அருளோவியத்தை முழுமையாகக் காண்போம்.

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கும் முடிச்சென்னி
பொன்மாலை மார்பன் என்புதுநலம் உண்டிகழ்வானே

—◆—

* குமரகுருபரர்—சகல்கலா வல்லிமாலை—7.

—◆—

# அழுகைச் சுவை

## (வித்துவான் ந. செகதீசன்)

---

*வாழ்த்து :*

நிலமும் விண்ணும் காற்றும் நீரும் நெருப்பு மிங்குத்
தோன்றுங்கால்
நெடிது நாட்டு முன்பிறந்து நிலவுமெமது தமிழன்னாய்!
நிலவும் உயர்வு தனிமை செம்மை நேர்ந்து நன்கு வாழ்கின்றாய்!
நேயமாகப் புதுமையிளமை நின்னைத்தழுவ ஒளிர்கின்றாய்!
அலகிலாத புலவர்தந்த அணிகள்பூண்டு மகிழ்கின்றாய்!
அரசின்காப்பில் அமையும்வெற்றி வீறும்அடைந்து
திகழ்கின்றாய்!
குலவுமினிய மழலைகொட்டும் கொழுந்தென்சுவையில் பாடல்கள்
கொஞ்சமேனும் நயந்துவாழ்த்துக் கூறவேண்டித்
தொழுகின்றேன்! (1)

*வணக்கம் :*

பூமணக்க வண்டுவந்து புகுந்தினிய புதுத்தேனை உண்டு பாடும்
காமணக்கும் தமிழ்நாட்டில் கவின்மணக்கும் ஈரோட்டில்
கனிந்த நல்ல
பாமணக்கும் படியிங்குக் கூடியுள்ள பாவலரின் அரங்கந் தன்னில்
நாமணக்கக் கவிபாடுந் தலைவ!உனை நான்வணங்கிப்
பணிகின் றேனே! (2)

சொற்றோறும் பொருள்வைத்துச் சுவைவைத்துச் சுடர்வீசும்
உணர்வு வைத்துக்
கற்போர்தம் மனம்வைந்துப் படிக்கவைக்கும் கற்பனைகள்
சால வைத்து
நற்கவிதை பொழிந்துலகை வாழவைக்கும் நல்லகவித்
தோழன் மாரே!
சுற்றமென அன்புவைத்த உங்கட்கும் சொல்லிவைத்தேன்
வணக்கம்! நன்றி! (3)

ஊனடைந்த உயிரதனை உளமதனை உயர்த்தவல்ல
தமிழின் பாவாம்
தேனடைக்கே ஈக்களென மொய்த்திங்குத் திரண்டுள்ளீர்!
மழையைக் கண்டு
கானடைந்த மகிழ்ச்சியினைக் கள்மலர்கள் கரமேந்திக்
காட்டும்! இங்கே
நானடைந்த மகிழ்காட்ட இயலேனாய் நலிந்தழுதேன்!
பொறுப்பீ ரன்பால்! (4)

**வருபொருள் :**

கவியரங்கம் நடத்துதமிழ் அவையீர் சற்றே
கவனித்துக் கேட்பீரென் வேண்டு கோளை !
தவிக்கின்றேன் முதலிடத்தை அழுமெ னக்கே
தந்திருக்க வேண்டுமந்தோ! எதனால் இந்தச்
செவியரங்கில் சுவைபொழியும் நாளில் நீங்கள்
சேர்த்துவைத்தீர் நகைப்பதற்கு முதலி டத்தை!
புவியரங்கில் முதன்முதலில் மனிதன் வாயில்
புறப்படுதல் அழுகையன்றி நகையா; சொல்வீர்! (5)

அழுதவண்ணம் பிறக்கின்றான் மனிதன் ! சாவை
அணைக்கின்ற பொழுதினிலும் அழுவான் ! சூழ்ந்தே
அழுதுபிறர் அரற்றுமொலி கேட்ட வண்ணம்
ஆவியினைத் துறக்கின்றான் என்ப துண்மை !
தொழுதும்மைக் கேட்கின்றேன் முதலி டத்தைத்
துவளாமல் அழுகைக்கே தரினென் குற்றம் !
வழுவிடுமே மரபுதந்த வரம்பென் பீர்கள் !
வாய்விட்டே அழுவோர்க்கு வரம்பும் உண்டோ ! (6)

அழுகையினால் ஆகுநலன் ஆத்தி சூடி
அறியாத குழந்தைக்கும் தெரியும் ! வேண்டித்
தொழுகையினால் ஆகாத பயன்கள் யாவும்
தொகைதொகையாய் அழுவதனால் ஆவ துண்டு!
தழுவுகைகள் அடித்தாலும் அடம்பி டித்துத்
தளராமல் அழுகுழந்தை முடிவில் வெற்றி
தழுவுகையில் தானழுகை நிறுத்தும் என்றால்
தன்னிகரில் அழுகைபற்றி என்ன சொல்வேன் ! (7)

பெண்டாட்டி விருப்பிற்குக் கணவன் தோற்றுப்
பிடிகொடுத்து விடுவதெலாம் எதனால்; அன்னாள்
கண்டிருக்கும் மொழியாலும் கனிவி ருக்கும்
கண்பார்வை ஒளியாலும் தனது நெஞ்சில்
கொண்டிருக்கும் கருத்ததனை முடித்துக் கொள்ளக்
குறிவைப்பாள் ! முடியவில்லை! என்றால் கேள்வன்
திண்டாடித் தவிக்குவணம் திட்டம் போட்டுத்
தேவைக்கே அழுதிடுவாள்! வெற்றி கொள்வான் ! (8)

ஆண்டவனைப் பெறவெளிய வழியை நீங்கள்
அறிவீரா அவையீரே அகமு ளைத்து
மூண்டபெரும் பத்தினால் கோவில் தோறும்
முயன்றோடிப் பெற்றிடலாம் ! நாளும் நாளும்
காண்டகுநற் பூசையுடன் விழாக்கள் செய்து
கைம்மாறில் பணிபுரிந்து பெறலாம் மேலும்
மாண்டகுநற் றிருவாத வூரர் சொன்னார்
மனங்கரைந்தே அழுவதனால் பெறலா மென்று ! (9)

(தொடரும்)